ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,915—1970 ජුලි 17 වැනි සිකුරාදා—1970.7.17

14,915 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 589 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 613 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 597 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 615 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 607 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 611 | நானாவித அறிவித்தல்கள் | — |



## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விகிதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விகிதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவிகிதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விகிதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் கூறிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சகப் பகுதி,*
*கொழும்பு,*
*1969 ம் ஆடு திசெம்பர் மீ 14 ந் உ.*

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையினம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. AB. 65/X. 2254/70.

## கடற்றொழில் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

கடற்றொழில் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சடித்த விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படும் விண்ணப்பங்கள் பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. எண். 500, கொழும்பு 1, என்ற விலாசத்தை வந்தடையவேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1970.7.31.

(ஆ) கடல் கடந்த விண்ணப்பங்கள் : 1970.8.7.

குறிப்பு : (1) தபால் மூலம் அச்சடித்த விண்ணப்பப் படிவம் கோரும் விண்ணப்பதாரர், அரசாங்க சேவையில் உள்ளாரா இல்லையா எனக் குறிப்பதோடு, 9" × 4" அளவுக்குக் குறையாத, முகவரி எழுதப்பட்டு, முத்திரை ஒட்டப்படாத, தபால் உறையையும் உள்ளடக்க வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச் சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக்கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) கடல் கடந்த அபேட்சகர்கள் வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் அச்சடித்த விண்ணப்பப் பத்திரங்களைப் பெறலாம். அவர்கள் விரும்பினால், அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்தில், இலங்கை அரசாங்க சேவைக் குழுச் செயலாளருக்கு அனுப்புமாறு, குறிப்பிட்ட தேதிக்கு முன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்:** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, தம்மை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும் இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :

(1) பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளமுடையதுமாகும். நியமனம் 3 ஆண்டுக் காலத்துக்குத் தகுதுகாண் முறையில் இருக்கும். எனினும், நிரந்தரமானதும், உபகாரச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பதில் கடமையாற்றுமாறு நியமிக்கப்படலாம். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின், இப்பருவத்தின் எக்காலத்திலும் அவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

(2) மேலதிகப் பயிற்சியும், அனுபவமும் பெறுதற் பொருட்டு, உத்தியோத்தர் வெளிநாடு செல்ல வேண்டப்படலாம்.

(3) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படுமிடத்து—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக்கத்துடனும், ஊக்கத்துடனும் கடைப்பிடித்து திருத்தியான முறையில் பூரணப் படுத்துவதாகவும், வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கை அரசாங்கத்துக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு :

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிகட்கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும் அதாவது இலங்கை அரசாங்கத்தாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்விப் பகுதியின் கூட்டினுலுமோ இப்பயிற்சி நெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (அஃதாவது சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள் முதலியன), இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாக ;

இலங்கை அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.

3. சம்பளமும் படிகளும் : இப்பதவிக்கு வழங்கப்படும் சம்பளத் திட்டம் வருமாறு :

ரூபா 6,720 இலிருந்து ரூபா 16,320 வரை செல்லும். ரூபா 360 வீதம் 12 ஆண்டுகளும், ரூபா 480 வீதம் 11 ஆண்டுகளும் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில், ரூபா 11,040 க்கும் ரூபா 14,880 க்கும் முன் வினைத் திறன்காண் தடையில் நிறுவப்படும். தெரியப்பட்ட அபேட்சகர் ஒரு விதித்த பட்டதாரிப் பட்டமோ அல்லது தமக்குரிய விஞ்ஞான முயற்சித் துறையில் ஒரு உயர்ந்த தரத் தகுதித் தேர்வுப் பத்திரமோ பெறுவிடின், ரூபா 11,040 க்கு மெல் வருடாந்தச் சம்பளமாகப் பெறத் தகுதியுடையவராவார்.

குறிப்பு : (1) புதிதாகச் சேர்க்கப்படுகையில் ஒரு உத்தியோகத்தர் அடிப்படை விஞ்ஞானப் பட்டத்திலுந் தரமுயர்ந்த பீ. எச். டீ. பட்டமோ அல்லது எம். எஸ். சீ. பட்டமோ உடையவராயிருப்பின், ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 7,800 ஆக இருக்கும்.

(2) தெரியப்பட்ட அபேட்சகரின் தகைமையும், அனுபவமும், சம்பளச் சலுகைக்குப் பாத்திரமாயிருப்பின் திறைசேரியின் உசாவுதலுடன் அவர் அத்தகைய சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

4. தகைமைகள் : ஒவ்வொரு அபேட்சகரும், பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970.7.31 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும், 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேணடும் ;

(இ) (1) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில இரசாயனவியலை அல்லது தாவரவியலைத் துணையாகக்கொண்டு விலங்கியலைச் சிறப்பாகப் பயின்ற முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாணப் பட்டதாரியாகவிருக்க வேண்டும்.

5. கேட்கப்படும்பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. : ஞானஸ்நானச் சான்றிதழோ, உதவிபெறும்பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுடையாளரிடமிருந்தோ, பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள் ;

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு : (1) விண்ணப்பப் படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, அரசாங்க சேவைக் குழுச் செயலாளருக்கு, முடிவுறுதேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு, நேராக அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சடித்த (“ ஆ ” எனக் குறித்த) அஞ்சல் அட்டை, இந்நோக்குக்காகப் பயனுறுத்தப்படலாம்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், அரசாங்க சேவைக்குழுச் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி, இத் திணைக்களத்தைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைச் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் (“ஆ” எனக் குறித்த) அச்சடித்த அஞ்சலட்டையை, அதில் கேட்டவாறு நிரப்பி, விண்ணப்பத்துடன் திருப்பியனுப்ப, இவ்வலுவலகம் விண்ணப்பம் கிடைத்ததை ஒப்புக்கொள்ளும். இத்தேவைக்கியைய நடக்காத விண்ணப்பதாரின் விண்ணப்பங்கள் ஒப்புகொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படமாட்டா. இத்தேவைக்கியைய நடந்தும், முடிவுறு தேதியின் பின் 3 வாரங்களுள் ஒப்புதற் கடிதம் பெறுவிடின், அரசாங்க சேவைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டுக்கியைய ஒழுகத்தவறின, கவனிக்கப்படும எத்தகைமையையும் விண்ணப்பதாரர் இழப்பார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500.
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 10 ந் உ.

7–676—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

இல. : வெ. மு. 2/196.

## கல்வி அமைச்சு

### கிரேக்க அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் 1970/71 ஆம் ஆண்டு

ஆராய்ச்சிப் படிப்புகளுக்கென கிரேக்க அரசாங்கத்தால் வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கற்கைத் துறைகள் வரையறுக்கப்பட்டில்லை. (பட்டதாரி ஆரம்பப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை :** புலமைப் பரிசில்களின் கால எல்லை சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகும். எனினும், படிப்புகளின் தன்மைக்கும் பெற்றுக் கொள்ளப்படும் தேர்ச்சிக்கும் அமைய இக்கால எல்லை நீடிக்கப்படக்கூடும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கினம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு கிரேக்க அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன் :** அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 31.12.70 அன்று 40 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுவதும் விரும்பும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமுடையதுமான இரண்டாம் வகுப்புப் பட்டம் ஒன்றைக் குறைந்தபட்சம் பெற்றிருக்க வேண்டும.
(தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கிரேக்க மொழியைப் படித்தற்குச் சம்மதிக்க வேண்டும்)

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது குறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 31.12.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள் :** இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையவராய் இருக்கும்—

(1) கிரேக்க நாட்டுக்குப் போய்திரும்பும் பிரயாணம் ;

(2) மாதாந்தச் சகாயப்படி.

**குறிப்பு**— இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை :** தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில் விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்மைப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், கிரேக்குக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கிரேக்கில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில், புலமைப் பரிசிலைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/– பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
7.7.1970.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

7–554—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

இல. வெ. மு/2/202

## கல்வி அமைச்சு

### ஹவாய் பல்கலைக் கழக புலமைப் பரிசில்கள், 1970

கீழநாடு, மேலை நாடுகளுக்கிடையில் கலாச்சார தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கான நிலையத்தால் பட்டப்பின் படிப்புகளுக்கு ஹவாய் பல்கலைக் கழகத்தில் செல்லுபடியாக வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புலமைப் பரிசில்கள் பின்வரும் துறைகளில் வழங்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| நூல்நிலைய விஞ்ஞானம் | பூச்சியியல் |
| கல்வி | நுண்ணுயிரியல் |
| புவியியல் | கடற்றொழில் உயிரியல் |
| புவிச்சரிதவியல் | உயிர் இரசாயனவியல் |
| பொருளியல் | உயிர் பௌதிகவியல் |
| தொழில் நிர்வாகம் | விவசாய எந்திரவியல் |
| குடிசார் எந்திரவியல் | விவசாய பொருளியல் |
| மின்சார எந்திரவியல் | மண் வளவியல் |
| கணிதம் | தோட்டச் செய்கை |
| பௌதிகம் | மண்ணியல் |
| இரசாயனம் | மனிதப் பிறப்பியல் |
| தாவரவியல் | மருத்துவவியல் |
| விலங்கியல் | |

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்று நிருபத்தில கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ்வரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 9 தொடக்கம் 24 மாத கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம்,... பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு ஹவாய் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1970 அன்று 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருக்க வேண்டும்.

(iii) குறைந்த பட்சம், அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) இதற்குமுன் அமெரிக்கப் பல்கலைக் கழகம் எதிலேனும் படிப்பு அனுபவம் பெற்றிருக்கப்படலாகாது.

(v) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (இப்புலமைப் பரிசில்களுக்கு நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஆங்கிலத்தை அந்நிய மொழியாகக் கருதும் ஒரு பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாய் இருக்க வேண்டும். அனுமதி முறைகளின் ஒரு பகுதியாக, பிறநாட்டு மாணவர்களின் ஆங்கிலத் தேர்ச்சியை மதிப்பிடும் முறையில் இப்பரீட்சை பிரதானமாக அமையும். 3½ மணித்தியால இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். இத்தொடர்பில் அபேட்சகர்கள் பதிவுத் கட்டணமாக 10 டொலர் செலுத்த வேண்டும். எனினும் பரீட்சைக்குத் தோற்றும் நேரத்தில் அபேட்சகர்கள் இதனைக் கொடுக்க வேண்டியதில்லை. அபேட்சகர்களுக்கு இறுதியில் புலமைப் பரிசில் வழங்கப்படுமிடத்து மட்டுமே, ஹவாய்க்குப் (Hawaii) போனபின் குறித்த பதிவுக் கட்டணத்தை கீழநாடு மேலைநாடு நிலையத்துக்கு அவர்கள் கொடுக்க வேண்டும். இத்தொகை அவர்களுக்குக் கொடுபடும் சகாயப்படிகளிலிருந்து 10 டொலர்களைக் கழிப்பதன்மூலம் அறவிடப்படும். பரீட்சை சம்பந்தமான விபரங்கள் அபேட்சகர்களுக்குக் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்).

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) ஹவாய்க்குப் போய்த்திரும்புதற்கான பயணச் செலவு.

(ஆ) கற்கையும் புத்தகங்களும்.

(இ) உணவுச் சகாயப்படியும் உறையகமும்.

(ஈ) சுகாதாரக் காப்புறுதி.

(உ) சொந்தச் செலவுக்கான சிறு தொகைச் சகாயப்படி.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஓரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஹவாய்க்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் — அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஹவாயில்கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்குகேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில், புலமைப் பரிசிலைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட

காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதர வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ண்ப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமைபற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கலவி அமைச்சின் நிரந்தரக காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அஙஙனம் செயயத்தவறும் விணணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ௵ ஜூலை ௴ 7 ந் உ.

7-558—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## சௌக்கியப் பகுதி

### பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவு

### பொதுச் சௌக்கியப் பொறியியற் தொழில்பயில்பவர் பதவி

சௌக்கியப் பகுதியின் பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவில் ஒரு பொதுச் சௌக்கியப் பொறியியற் தொழில்பயில்பவர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தைப் போன்ற பத்திரத்தில் நிரப்பப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சௌக்கிய சேவை அதிபதி, தபாற்பெட்டி 500, செக்கிரட்டேரியற் கட்டிடம், கொழும்பு-1 என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும்.

2. பயிற்சிக்கால உதவிப்பணமும், சேவை நிபந்தனைகளும்.—(i) தொழில்பயில்பவர் அவரது தொழிற் பயிலுங் காலத்தின்போது பின்வருமாறு வேதனம் பெறுவர் :—

1 ஆம் வருடம் ரூபா 7.80 நாளொன்றுக்கு
2 ஆம் வருடம் ரூபா 8.50 நாளொன்றுக்கு
3 ஆம் வருடம் ரூபா 9.20 நாளொன்றுக்கு
4 ஆம் வருடம் ரூபா 9.90 நாளொன்றுக்கு
5 ஆம் வருடம் ரூபா 10.60 நாளொன்றுக்கு

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்பயில்பவர் பின்னுற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 5 வருடங்கள் தொழில்பயில வேண்டுமெனக் கேட்கப்படுவர் :—

(அ) பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவின் படவரைவுக் கந்தோரில் ஒரு வருடம்.
(ஆ) பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவின் ஆய்கூடத்தில் ஆறு மாதங்கள்.
(இ) பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவின் வேலைத்தலத்தில் ஆறு மாதங்கள்.
(ஈ) நில அளவை, நுண்ணாய்வு வேலைகளில் ஒரு வருடம்.
(உ) கட்டுவேலைகளில் இரண்டு வருடங்கள்.

மேலே (ஈ), (உ) பந்திகளுக்குட்படும் காலங்கள் பிரதம பொதுச் சௌக்கியப் பொறியியலாளரின் விருப்பத்தைப் பொறுத்து ஒரே நேரத்தில் ஒன்றாக இயங்கவுங்கூடும்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்பயில்பவர் (சிவில்) குடியியற் பாடங்கள், பொதுச் சௌக்கியப் பொறியியற் பாடங்கள், நில அளவை பாகம் I, II என்பவற்றில் இலங்கை நுண்தொழில் கல்லூரியில் நடாத்தப்படும் வகுப்புக்களுக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர்.

3. சிவில் பொறியியலாளர்கள், பொதுச் சௌக்கியப் பொறியியலாளர்கள், தண்ணீர்ப் பொறியியலாளர்கள் தாபனங்களின் மாணவர்கள்—இவர்களில் முன்னேறும் தகுதியுள்ளவர்களும், நல்ல கல்வி அறிவுள்ளவர்களுமான தொழில் பயில்பவர் பின்வரும் நிபந்தனைகளின் விஷயத்தில் திருப்தியளிப்பவர்களாயிருக்குமிடத்து மாணவத் தகைமைகக்குச் சிபார்சு செய்யப்படலாம.—

(அ) உப-பரிசோதகர் தரப் பதவி உயர்சிக்கான அரசாங்கப் பகுதித் தகைமைப் பரீட்சையில் திறமையான சித்தியுடன் சித்தியடைதல்.
(ஆ) இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் அதற்கென விதிக்கப்பட்ட வகுப்புகளைத் திருப்திகரமாகப் பினபற்றி முடித்து அக்கல்லூரி அதிபரிடமிருந்து நல்ல அறிக்கைகளைப் பெறுதல் ; அத்துடன்
(இ) அவர்கள் சேவை செய்த உத்தியோகத்தர்களிடமிருந்து நல்ல அறிக்கைகளைப் பெறுதல். எனினும், தொழில் பயிலும் எவரும் மாணவத் தகைமைக்குச் சிபார்சு செய்யப் படுவார்களென்பதற்கு ஒருவிதமான வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை. தொழில் பயிலும் எவரும் சௌக்கியசேவை அதிபதியின் அங்கீகாரமின்றி பொறியியற் பிரிவிலிருந்து விலகினுல் தொழில் பயில்பவர் என்ற தகைமை முடிவடைந்துவிட்டதாகக் கருதப்படுவதுடன் மாணவத்தகைமையும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படக்கூடும்.

4. ஆறுமாதப் பயிற்சி முடிவில் தொழில் பயில்பவருடனும், அவரது பெற்ருேர் அல்லது பாதுகாவலருடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும். அத்தகைய ஒப்பந்தம் துர்ப்பழக்கம், ஊக்கமின்மை அல்லது வேலையில் சிரத்தையின்மை என்னும் காரணங்களை முன்னிட்டு இடைநிறுத்தப்படலாம்.

5. தொழிலுக்கான வாய்ப்புக்கள்.—தொழில் பயில்பவர் அவரது ஒப்பந்த காலத்தை முடித்ததும் ஏதாவது நியமனத்துக்கான சௌக்கியப் பகுதியிடம் உரிமைகோரும் அருகதையுடையவராகார். எனினும், தொழில், பயில்வோர் சிவில் பொறியியலாளர் தாபனத்தின் கூட்டு அங்கத்துவப் பரீட்சையின் "ஏ", "பி" பிரிவுகளில் சித்தியெய்தியிருப்பதுடன் பொறியியற் தரங்களில் காலித்தானங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் இருக்குமாலுல் அவர்கள் கனிஷ்ட உதவிப் பொதுச் சௌக்கியப் பொறியியலாளர் தரத்துக்கு நியமனம் பெறத் தகுதியுள்ளவர்களாவர். இருப்பினும் அவர்கள் இதே விதமான அல்லது சமமான தகைமைகளைக்கொண்ட ஏனையோருடன் தமது சந்தர்ப்பத்தை எதிர்நோக்க வேண்டும். அவர்கள் உப-பரிசோதகர்கள் தரத்துக்கான (சௌக்கியப்) பகுதிப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன், மற்ற வழிகளில் தகுதியுள்ளவர்களாகவும், அவற்றுக்கான காலித் தானங்களும் இருக்குமிடத்து உப-பரிசோதகர்கள் தரத்துக்கு நியமிக்கப்படலாம். மேற்படித் தரங்களில் எதிலும் காலித்தானங்கள் இல்லாமல் பகுதி வேலைக்கு மேற்பார்வை உத்தியோகத்தர்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இந்தத் தொழில் பயில்பவர் "முன்பு தொழில் பயின்றவர்கள்" என்ற பெயரில் நாள்வீதச் சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்படலாம்.

6. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) வம்சாவழியாக அல்லது பதிவு செய்யப்பட்டதனுல் ஒரு இலங்கையரென்றும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ந் திகதியன்று 17 வயதுக்குக் குறையாதவரென்றும், 22 வயதுக்கு மேற்படாதவரென்றும் ;

(இ) தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் உள்ளவரென்றும் ; (தேர்ந்தெடுக்கப்பட்டால் சௌக்கிய சேவை அதிபதியிடமிருந்து ஒரு சான்றிதழ் அவசியமாகும்) ;

(ஈ) இலங்கைக் கல்விப் பகுதியின் பொதுக் கல்வித் தராதரப் பத்திர (சாதாரணப்) பரீட்சையில் ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ், தூயகணிதத்தில் இரண்டு பிரிவுகள் என்பவற்றுடன் பொறியியல், பௌதிகவியல், இரசாயனம் என்னும் விஞ்ஞான பாடங்களுள் இரண்டில் ஒரே முறையில் ஒரே பரீட்சையிற் திறமையான சித்திியெய்தியுள்ளாரென்றும் திருப்தியான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. (பிறப்புப் பதிவு செய்யப்படாத விண்ணப்பகாரரின் விஷயத்தில்) பதிவாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது ஒரு விசேட வயதுச் சான்றிதழ், வயதை நிலைநாட்டும் நோக்கத்துக்காக ஏற்றுக் கொள்ளப்படும்).

(ஆ) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரரின் குணத்தைப் பற்றிக் குறிப்பிடுவனவான அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள பரீட்சார்த்திகள் இத்தகைய நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

8. இந்த வர்த்தமானியின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II ல் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் கிடைத்ததைப்பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த விளம்பரத்தின் தேவைகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அம்சத்திலும் இசைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எல். டபிள்யு. குணவர்த்தன,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

தபாற்பெட்டி இல. 500.
காலிமுகச் செக்கிரட்டேரியற், கொழும்பு.
1970 ம் ஆடு யூலை மீ 4 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப்பெயர் :————.
(தனித்தனி எழுத்துக்களில்)
2. நிரந்தரமான தபால் விலாசம் :————.
3. விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதியன்று சரியான வயது— வருடங்கள்———— மாதங்கள்———— நாட்கள்———
4. எந்நாட்டவர் :————.
(பதிவு செய்யப்பட்டதனால் அல்லது வம்சாவழிமூலம் ஒரு இலங்கையரா என்பது)
5. சித்தியெய்திய பாடங்கள், பெற்ற தேர்ச்சியின் அளவு என்பவற்றுடன் கல்வித் தகைமைகளின் விவரங்கள் :————.
6. பாடசாலை அல்லது கல்லூரியை அன்றேல் அவை இரண்டையும் விட்ட காலம் முதல் பார்த்த தொழில்களை, அவற்றில் சேர்ந்த, விலகிய திகதிகளுடனும், பெற்ற சம்பளங்களுடனும் குறிப்பிடுக :————.
7. வேறு உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் :————.
8. விண்ணப்பகாரர் ஏதாவது குற்றச்சாட்டின்பேரில் ஒரு நீதிமன்றத்தில் முன்னெப்போதாவது, குற்றஞ்சாட்டப்பட்டாரா அல்லது தண்டிக்கப்பட்டாரா ? ஆம் எனில், விவரங்களைக் குறிப்பிடுக :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையும், சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன், இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

7-601—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் 3 ஆம் தர எந்திரத் தொழில் முகாரியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் 3.8.1970 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம் :

இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்—ரூபா 4,152—6×144—5,016 வருடாந்தம் (திரட்டிய சம்பளம்).

3. ஒப்பந்த நியதிகள் :

பதவிகள் தற்காலிகமானவையாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள் :

(அ) அரசாங்க தொழிற்சாலையில் அல்லது அதை ஒத்த அரசாங்க நிலையங்களில் எந்திரப் பொறியியல் தொழில் பயில்பவராக அல்லது மேற்பார்வை ஓவசியராக (எந்திர முறை) 5 வருடத் தொழிற் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்தவராகவும்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு தனியார் நிலையத்தில் 5 வருட எந்திரத் தொழில் பொறியியல் பயிற்சிநெறியையும், செயல்முறைத் தொழில் நுட்பவியல் நிலையத்தில் பகுதி நேர விரிவுரையை மேற்கொண்டவராகவும்,

அல்லது

(இ) கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளர்களுக்கான எந்திர மின்சாரத் தொழில் பயிற்சி நெறியை 2 வருடங்களில் மேற்கொண்டவராகவும் இருப்பதுடன் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் மேற்பார்வை ஓவசியராக (எந்திரத் தொழில்) 3 வருடச் சேவை செய்தவராகவும்,

அல்லது

(ஈ) உதவி முகாரி (எந்திரத்தொழில்) அலுவலாளர்களின் பதவித்தர உயர்விற்காகப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலாளர் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரர் 21 வயதிற்குக் குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்கசேவையில் உள்ள அலுவலாளர்களுக்கு வயதெல்லை நிபந்தனை கிடையாது).

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்தல் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(2) உயர்கல்விச் சான்றிதழும், உயர்தொழிற் தகைமைச் சான்றிதழும்.

(3) விண்ணப்பதாரரின் பண்பைப்பற்றிக் கூறும் சமீபகாலத்திய நற்சான்றிதழ்கள் மூன்று (ஏற்கெனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது).

6. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்பலாம். திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் இவ்வலுவலகத்திற் கிடைக்கப்பெற்றால், தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவர்களாற் காட்டப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி விதிக்கப்பட்ட திகதியின்பின் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்களின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவரை நியமனத்திற்காக விடைக்கமுடியும் என்பதைத் திணைக்களத் தலைவர்

குறிப்பிட்டாலன்றி அவரின் விண்ணப்பம் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.

8. விண்ணப்பங்கள், இரத்மலானை, உள்ளூராட்சி அமைச்சு நீர் வழங்கல், வடிகால் அமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதிப் பணிப்பாளர் அவர்களுக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி எனக்காவது அல்லது இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக் காவது பெயர் குறிப்பிட்டு அனுப்பக்கூடாது.

9. பரீட்சார்த்திகள் குறிக்கப்பட்ட இடத்தில் நியமிக்கப்பட்ட நேரத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி வேண்டப் படுவர். நேர்முகப்பரீட்சையின் போது, விண்ணப்பத்துடன் இணைக் கப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்கவேண் டும். இதுதொடர்பான பிரயாணச் செலவோ அல்லது ஏனைய செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

10. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக் குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பாகம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

ஆர். வி. பெருமையினர்,
பணிப்பாளர்,
நீர்வழங்கல், வடிகால் அமைப்பு
உள்ளூராட்சி வேலைகள் பகுதி,

நீர்வழங்கல், வடிகால் அமைப்பு
உள்ளூராட்சி வேலைகள் பகுதி,
இரத்மலானை.
1970 யூலை 7 ஆந் நாள்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**எந்திர முகாரி பதவிகள் தரம் 3**

**உள்ளூராட்சி அமைச்சு, நீர்வழங்கல் வடிகால் அமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி**

1. முழுப்பெயர் :————.
(தனித்த எழுத்தில்)

2. தபால் முகவரி :————.
(முகவரி மாற்றம் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்)

3. தேசிய இனம் :————.
(வம்சாவழியா அல்லது பதிவுப் பிரசையா என்பதைக் குறிப் பிடுக. பதிவுப் பிரசையாயின், பதிவுப் பத்திரத்தின் தொடர்பு இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடுக.

4. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழ்ப் பிரதியை இணைக்கவும்).
(ஆ) விண்ணப்பம் முடியும் திகதியன்று சரியான வயது :

5. பிறந்த இடம் :————.
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பாட்டன் :————.

6. விவாகம் ஆனவரா அல்லது தனிப்பட்டவரா :————.

7. (1) கல்வித் தகைமைகள் :————.
(2) உயர்தொழிற் தகைமைகள் :————.
(3) ஏனைய விசேடத் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

8. நற்சான்றிதழ் அளிப்போரின் பெயர், பதவிப்பெயர், முகவரி :
(1)
(2)
(3)

9. பாடசாலையை விட்ட காலம்முதல் பார்த்த தொழில் விபரங் கள் :—
(1) வகித்த பதவி :————.
(2) சேவை செய்த காலம் :————.
(3) வேலையை விடுவதற்குரிய காரணங்கள் :————.

10. தற்போதைய தொழில் :————.
(1) பதவி, தரம், நியமிக்கப்பட்ட திகதி :————.
(2) உபகாரச்சம்பளம் உடையதா/உபகாரச்சம்பளம் அற் றதா :————.
(3) தற்போதைய அடிப்படைச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.

11. பிரசுரத்தின் 4 (1) ஆம் பந்தி நியதிகளின்படி உள்ள தகை மைகளைத் தெளிவாகக் கூறுக :————.
(அ) (இ)
(ஆ) (ஈ)

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை என்று நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவை யாகவோ அல்லது உண்மையற்றவையாகவோ தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடின்றி வேலைநீக்கம் செய்யப்படு வேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :

7—668—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல். 14,915

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மெக்கானிக்கல் பொறியியல் பகுதியில் III ஆம் வகுப்பு தொழிலாளர் பதவிகட்கான காலிஸ்தானங்கள்

பின்வரும் பதவிகட்கு இலங்கைப் பிரஜைகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

கொல்லர்
கடைச்சலெந்திரத் தொழிலாளர்
தகரம் ஒட்டுவோர்
தச்சர்
வார்ப்பச்சுளர்
மின்சாரத் தொழிலாளர்
பொருத்துவோர்
சேவையாளர்கள் ("சேர்விஸ்மன்")
தயர் பொருத்துவோர்

**தகைமைகள் :**

**வயது.**—31.7.1970 ஆம் தேதியன்று 20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டோராக விருக்கவேண்டும்.

**கல்வி.**—ஆகக் குறைந்தது 5 ஆம் தரத்தில் சித்தியெய்தியிருக்கு வேண்டும்.

**அனுபவம்.**—அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் மூன்று ஆண்டுத் தொடர்ச்சியான அனுபவம்.

**சம்பளம்.**—மாதாந்தம்—ரூபா 185—5 × 18—ரூபா 275 (எல்லாப் படிகளும் உட்படும்).

நேர்முகப் பரீட்சை, தொழில் பரீட்சை மூலமே பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவர்.

இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக் கப்பட்டு, கொழும்பு 5, கிருல் வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்கு, 31.7.1970 ஆம் தேதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளடங்கிய உறைகள் மீது "பீபிஎப்" கிளை எனக் குறிப்பிடவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
1970 ௵ ஜூலை ௴ 5 ந் உ.

**மாதிரிப் படிவம்**

## இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மெக்கானிக்கல் பொறியியல் பகுதியில் III ஆம் வகுப்பு தொழிலாளர் பதவிகட்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பதவி : ————.
2. முழுப் பெயர் : ————.
3. முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
31.7.70 ஆம் திகதியன்று வயது : ————.
————வருடம், ————மாதம்
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்).
5. கல்லூரித் தகைமைகள் : ————.
(சித்தியடைந்த ஆகக்கூடிய வகுப்பும் மொழியும் தரப்படவேண்டும்)
6. அனுபவம் : ————.
(அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தின் பெயரும் அனுபவத்தின் காலமும் தரப்பட வேண்டும். சான்றிதழின் பிரதியை இணைக்கவும்).

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்த விவரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவற்றிற்கு ஆதாரமாக சாதனங்கள் சமர்ப்பிக்க முடியும். இதில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், தெரிவு செய்தலுக்கு முன் நான் தகைமை நீக்கம் செய்யப்படக்கூடுமென்பதையும் நியமனத்திற்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கம் செய்யப்படக்கூடுமென்பதையும் நான் அறிவேன்.

————————,

தேதி : ————————. பரீட்சார்த்தியின் கையொப்பம்.

7-651—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எமது இலக்கம் இ1/70

## இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குப் போட்டிப்பரீட்சை—1970

*இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குக் கொழும்பில் 1970 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்குரிய பின்வரும் பிரமாணங்கள் பொது அறிவிப்புக்காக வெளியிடப்படுகின்றன. 29.5.1970 ஆந் திகதியின் 14,908 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இப்பரீட்சை தொடர்பான 8.5.1970 ஆந் திகதிய அறிவித்தல் இத்தால் நிராகரிக்கப்படுகின்றது.*

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
கொழும்பு, 1970 ம் ஆண்டு யூலை மீ 4 ந உ.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

### பிரமாணங்கள்

1. இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிற்கும், இலங்கை கடல் கடந்தசேவைக்கும் அனுமதிப்பதற்கு 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலோ அல்லது அம்மாத அளவிலோ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் யாவர்குமுரிய ஒரு போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். உண்மையான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். பொது நலங்கருதி இப்பரீட்சையை நிராகரித்தல் அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதினால் அவ்வாறு செய்யும் உரிமையை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது. இப்பரீட்சையைத் தள்ளிப் போடல் அவசியமென அரசாங்க வேைக்குழு கருதினால் ஆணைக்குழு அவ்வாறு செய்யலாம்.

2. இப்பரீட்சை முடிவில் இலங்கை நிருவாகச் சேவையிலும் இலங்கை கடல் கடந்த சேவையிலும் நிரப்பப்படவுள்ள வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கையும் அத்தகைய வெற்றுப்பதவிகளை நிரப்பும் தேதியும் உரிய காலத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அவ் வெற்றுப் பதவிகள் யாவற்றையுமோ அல்லது சிலவற்றையுமோ நிரப்பாது விடும் உரிமையையும் அல்லது வெற்றுப்பதவிகளின் எண்ணிக்கைக்கு மேலாக நிரப்பும் உரிமையையும் அரசாங்க சேவை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது.

3. இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும். இப்பரீட்சையின் பொருட்டு இலங்கையர் என்பவர் பரம்பரையாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைக் குடியாக இருத்தல் வேண்டும்.

4. இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதி 22 வயதடைந்தவராயும் 30 வயதடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் உள்ளூராட்சிச் சேவையிலும் நிரந்தர நியமனம் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய பெண் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் போட்டியிடும் உரிமையுடையவராவர். ஆனால் அவர்கள் நிரப்பப்படவுள்ள பதவிகளுள் 20 சத வீதத்துக்கு மேற்படாத பதவிகளை மட்டும் நிரப்பலாம் என்னும் நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவராவர்.

6. பரீட்சார்த்திகள் இப்பரீட்சை எழுதுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து எழுத்து மூலம் நியமிப்புப் பெறவேண்டுமென வேண்டப் படுகின்றனர்.

7. பரீட்சார்த்திகள் உடல்நலமும் பண்பும் சம்பந்தமாகத் தாம் தகுதியுடையவரென அரசாங்க சேவை ஆணைக்குழுவைத் திருத்திப்படுத்தல் வேண்டும். அவர்கள் திடமான உடலமைப்பு உடையவராகவும் நல்ல கண்பார்வை உடையவராகவும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு உடல் நலத்தகுதி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். இந்த விடயங்கள் சம்பந்தமாகச் சித்தியடையும் பரீட்சார்த்திகளைச் சோதிப்பதன் பொருட்டு அவர்கள் ஒரு மருத்துவப் பரீட்சைக்கு ஆளாதல் வேண்டும்.

8. மண முடித்த ஒரு பரீட்சார்த்தி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விசேட சம்மதமின்றி நியமனத்திற்கு உரிமையுடையவராகார்.

9. **இப்பரீட்சைக்குரிய கட்டணம்.**—போட்டிப் பரீட்சைக்கு 200 ரூபா. இக்கட்டணம் விண்ணப்பம் முடிவுறும் தேதிக்கு முன்னராக அண்மையிலுள்ள கச்சேரியிலோ, கொழும்பு பொதுத் திறைசேரியிலோ செலுத்தப்பட்டு அரசிறைத் தலைப்பு VI உபதலைப்பு 3, இனம் (4) என்பதில் வரவு வைக்கப்படல்வேண்டும். கச்சேரியினது அல்லது திறைசேரியினது பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—இப்பரீட்சை எடுப்பதற்கு நியமிப்புப் பெறுத பரீட்சார்த்திகட்கு குறித்த கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும். ஒரு பரீட்சார்த்திக்கு நியமிப்பு அளித்த பின்னர் அவர் எக்காரணம் பற்றியும் பரீட்சையிலிருந்து விலகினால் அல்லது பரீட்சை எடுப்பதற்குத் தோற்றுவிடில் இக்கட்டணம் முழுவதையும் அல்லது பகுதியையேனும் திருப்பிப் பெறும் உரிமையுடையவராகார்.

(ஆ) மருத்துவப் பரீட்சைக்கு ரூபா 10.50 சதம். இக்கட்டணம் செலுத்தவேண்டிய முறை சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

10. (அ) குறித்த போட்டிப் பரீட்சை எழுதுவதற்குரிய நியமிப்பானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் சிறப்பு அல்லது சாதாரண போட்டிப் பரீட்சையில் அல்லது இதனையொத்த தரமெனக் கருதப்படும் வேறு யாதாயினும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டதாகும்.

(ஆ) வாய்மொழிப் பரீட்சையின்போது தமது வட்டச் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

(இ) இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிக்கப்படுவதற்குரிய போட்டியில் தகைமைபெற்ற பரீட்சார்த்திகள் மட்டும் சேரலாம். இலங்கை நிருவாகச் சேவை, இலங்கை கடல் கடந்த சேவை ஆகியவற்றிற்கிடையில் தங்களது விருப்புரிமையை பரீட்சார்த்திகள் கூண்டு 18 இல் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதிக்குப் பின் குறிப்பிட்ட விருப்புரிமையில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டா.

11. **விண்ணப்பிக்கும் முறை.**—(அ) விண்ணப்பப்படிவங்கள் 1970 ஆம் ஆண்டு யூலை 19 தொடக்கம் ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வரைக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரிடமிருந்து பெறப்படல் வேண்டும் ; அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களுக்குரிய வேண்டுகோள்களுடன் 9″ × 4″ க்குக் குறையாமல், முகவரியிடப்பட்டு முத்திரையிடப்படாத ஒரு உறையும் அனுப்பப்படல் வேண்டும். நேராக வந்து கேட்போருக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்படமாட்டா.

**குறிப்பு.**—(i) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியின் 14,908 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆந் திகதிய எனதறிவித்தலின் பிரகாரம் தங்களது விண்ணப்பங்களை எலவே அனுப்பிய பரீட்சார்த்திகள் திருத்தப் பெற்ற பிரமாணங்களில் பரீட்சைக்குத் தோற்ற விரும்பின் அவர்களும் புதிதாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பங்கள். கீழ்வரும் (ஆ) பந்தியின் நியதிப்படி 1970 ம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதியன்றோ, அதற்கு முன்னதாகவோ அனுப்பப்படல் வேண்டும். இந்த முழுப்பரீட்சைக்குரிய கட்டணம் 200 ரூபா வாதலால் இப்பரீட்சார்த்திகள் மேலும் 100 ரூபா கட்டுதல் வேண்டும்.

29.5.1970 ஆந் திகதியின் 14,908 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 8.5.70 ஆந் திகதி அறிவித்தலின் பிரகாரம் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டனவாகக் கருதப்படும். முன்னர் விண்ணப்பம் அனுப்பியிருந்த பொழுதிலும் இந்த அறிவித்தலின் பிரகாரம் புதிதாக விண்ணப்பங்கள் அனுப்பத்தவறும் விண்ணப்பகாரர் எவரும் இப்பரீட்சையெடுக்க உரித்துடையராகார்.

(ii) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியின் 14,908 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1970 மே 29 ஆந் திகதிய அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்களை அனுப்பிய பரீட்சார்த்திகள் திருத்தப்பெற்ற பிரமாணங்களில் இப்பரீட்சையெடுக்க விரும்பாதுவிடின், தங்களது கட்டணத்தை திருப்பியளிக்கும்படி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு எழுத்து மூலம் கோரின் அவர்களது பரீட்சைக்கட்டணம் திருப்பியளிக்கப்படும். இக்கோரிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு 1970 ஓகத்து மாதம் 18 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். இத்திக்குப் பின்னர் அனுப்பப்படும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

(ஆ) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்குரிய விண்ணப்பங்கள், அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளர், தபால் பெட்டி இல. 500, கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன் அது பதிவு அஞ்சலில் அன்னுரை 1970 ஓகத்து மாதம் 18 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படலாம். அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் நிரு. பி. 109 இன்படி அவர்களின் திணைக்களத் தலைவர்க்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க கூட்டுத் தாபனங்களிலும், உள்ளூராட்சிச் சேவையிலும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவரவர்களின் தலைவர்க்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

**(இ) விண்ணப்பங்கள் எல்லாவகையிலும் முற்றாக இருத்தல் வேண்டும். கேட்கப்படும் தகவல்கள் யாவற்றையும் கொண்டிராத எந்த விண்ணப்பமும் அதில் கொண்டுள்ள தகைமைகளைக் கொண்டமட்டும் தீர்மானிக்கப்படுவதுடன் நிராகரிக்கப்படுவதற்கும் ஏதுவாகும்.**

(ஈ) அத்தகைய விண்ணப்பம் அல்லது அது சம்பந்தமான கடிதம் எதுவும் அஞ்சலில் இழக்கப்பட்டுள்ளது அல்லது தாமதிக்கப்பட்டுள்ளது என்னுங் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரை தம்து விண்ணப்பங்களைத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தமது சொந்த ஆபத்தின் பேரில் அவ்வாறு செய்வர்.

**(உ) விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை " அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ள) அதில் குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பித் திருப்பியனுப்புமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். அப்பொழுது இவ்வலுவலகத்தில் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படும். இத்தேவைக்கிணங்க ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா. இத் தேவைக்கிணங்கி ஒழுகியும் முடிவு தேதிக்கு பின்னர் மூன்று கிழமைக்குள் ஒப்புக்கொள்ளலைப் பெறுத பரீட்சார்த்திகள் அரசாங்க சேவை ஆணைக் குழுச் செயலாளருக்கு உடனேயே அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கிணங்க ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரரின் கோரிக்கை எதுவும் ஆராயப்படாது விடப்படலாம்.**

12. விண்ணப்பப்படிவம் பெறப்பட்டதும் பரீட்சைக்குரிய நியமிப்பு ஆராயப்படும்.

13. **எந்தப் பரீட்சார்த்தியும்** இரு தடவைக்கு மெலாக யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சையெடுக்க உரிமையுடையவராகார்.

14. இப்பரீட்சை எழுதுவதற்கு நியமிப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள எல்லா பரீட்சார்த்திகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர் அனுமதி அட்டைகளை வழங்குவார்.

**15. அடையாள அட்டைகள் பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது அடையாளத்தை நிருபிக்குமாறு வேண்டப்படுவர். இதன் பொருட்டுப் பின்வரும் சாதனங்கள் யாதேனும் ஏற்றுக்கொள்ளப்படும் :—**

**(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழங்கும் அடையாள அட்டைகள்.**

**(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக் காலத்துக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான கடவுச் (பாஸ்போட்) சீட்டு.**

**(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பிறிதோர் நியதிச் சட்டமுறையான நிறுவனத்தின் அதிகாரத் தின் பேரில், இப்பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ளதும் அதனை வைத்திருப்பவரின் நிழல் படத்தையும் கொண்டுள்ளதுமான ஒரு சான்றிதழ் உத்தரவுச் சீட்டு அல்லது பிறிதொரு சாதனம் எதுவும்.**

**16. பொய்யான தகவல்களைக் கொடுப்பவர்க்குத் தண்டம் இப்பரீட்சைப் பிரமாணங்களின்படி ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டால், இப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சையுரிமை நிராகரிக்கப்படு வதற்கும் ஏதுவாகும்.**

**ஒரு பரீட்சார்த்தி அளிக்கும் விபரங்கள் எவையும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் எவ்வுண்மையையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அரசாங்க சேவையிலிருந்து அவர் விலக்கப்படுவதற்கு ஆளாவர்.**

17. அரசாங்க செய்திமடலிலிருந்து பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளின் நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

**இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கைக் கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குப் போட்டிப் பரீட்சை—1970**

பரீட்சைத் திட்டம்

**மொழி மூலம்.**—போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(அ) **கட்டாய பாடங்கள்.**—கட்டுரை சுருக்கியெழுதல், பொது அறிவு, பரீட்சார்த்திகள் இப்பாடங்களை எம்மொழி மூலம் எடுப்பர் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களை ஒரு மொழி மூலத்தில் மட்டும் எடுத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களை எம்மொழி மூலத்தில் எடுக்கின்றனரோ அம்மொழியிலேயே அவர்கள் அரசாங்க சேவையில் சேருவதாகக் கருதப் படுவர்.

(ஆ) **விருப்புரிமைப் பாடங்கள் :**

(i) பரீட்சார்த்தி தேர்ந்தெடுக்கும் பாடம் அவரால் பட்டப் பரீட்சைக்கு எடுக்கப்பட்டதாயின் பட்டப் பரீட்சையில் அப்பாடத்தை எம்மொழி யில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம் மொழியிலேயே எழுதுதல் வேண்டும் ;

(ii) பிற சந்தர்ப்பங்கள் யாவற்றிலும், ஒவ்வொரு பாடத்தையும் தான் எடுக்க விரும்பும் மொழி மூலத்தை விருப்புரிமை ஒழுங்கில் பரீட்சார்த்தி குறிப்பிடுதல் வேண்டும். இப்பாடங்களை எம்மொழியில் எடுக்க வேண்டுமென்பதை ஆணைக்குழு தற்றுணிபுப்படி தீர் மானிக்கும்.

பரீட்சையில் பின்வரும் பாடங்கள் சேர்க்கப்படும். ஒவ்வொரு பாடத்துக்கும் அதற்கெதிராகக் காட்டப்படும் புள்ளிகள் கொடுக்கப்படும்.

**பிரிவு அ.—எல்லாப் பரீட்சார்த்திகளும் கட்டாயமாக எடுத்தல் வேண்டும்.**

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | கட்டுரை | 100 |
| 2. | சுருக்கியெழுதல் | 50 |
| 3. | பொது அறிவு | 150 |
| 4. | வாய்மொழிப் பரீட்சை (பொது) | 250 |

**பிரிவு ஆ.—விருப்புரிமைப் பாடங்கள்—இப்பிரிவில் மொத்தம் 600 புள்ளிகள் வரை பரீட்சார்த்தி பாடங்களை எடுக்கலாம்.**

| | | |
|---|---|---|
| 5. | சிங்களம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 6. | சிங்களம் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 7. | தமிழ் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 8. | தமிழ் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 9. | அரபி (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 10. | அரபி (உயர்பிரிவு, நான்கு தாள்கள் | 400 |
| 11. | சமஸ்கிருதம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 12. | சமஸ்கிருதம் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 13. | பாளி (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 14. | பாளி (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 15. | ஆங்கிலம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 16. | ஆங்கிலம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 17. | இலத்தின் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 18. | கிரீக் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 19. | கிலாசிக் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 20. | பிரான்சு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 21. | வரலாறு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 22. | வரலாறு (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 23. | பொருளியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 24. | பொருளியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 25. | அரசியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 26. | அரசியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 27. | சமூகவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 28. | சமூகவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 29. | பூகோளவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 30. | பூகோளவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 31. | புதைபொருளியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 32. | புதைபொருளியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 33. | மனிதரியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 34. | பௌத்தநாகரிகம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 35. | பௌத்தநாகரிகம் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 36. | மெஞ்ஞானவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 37. | மெஞ்ஞானவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 38. | தூயகணிதம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 39. | பிரயோககணிதம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 40. | கணிதம் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 41. | பௌதிகவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 42. | பௌதிகவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 43. | இரசாயனவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 44. | இரசாயனவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 45. | தாவரவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 46. | தாவரவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 47. | விலங்கியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் | 200 |
| 48. | விலங்கியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள் | 400 |
| 49. | அரசாங்க நிருவாகம் (ஒரு தாள்) | 100 |
| 50. | அரசாங்க நிதி (ஒரு தாள்) | 100 |
| 51. | அலுவல் நிருவாகம் (ஒரு தாள்) | 100 |
| 52. | முகாமைத் தத்துவங்கள் (ஒரு தாள்) | 100 |
| 53. | சந்தைப்படுத்தல் (ஒரு தாள்) | 100 |
| 54. | கல்வி சார்ந்த உளவியல் (ஒரு தாள்) | 100 |
| 55. | கல்வித் தத்துவங்கள் (ஒரு தாள்) | 100 |
| 56. | ஒப்பியல் கல்வி (ஒரு தாள்) | 100 |
| 57. | ஆட்கள் உடமைச் சட்டம் (ஒரு தாள்) | 100 |
| 58. | கட்டுப்பாடுகள் சட்டம் (ஒரு தாள்) | 100 |
| 59. | உரோமன் சட்டம் (ஒரு தாள்) | 100 |
| 60. | அரசியலமைப்புச் சட்டம் (ஒரு தாள்) | 100 |
| 61. | சர்வதேசச் சட்டம் (ஒரு தாள்) | 100 |
| 62. | நீதிவன்மையும் சட்டக்கொள்கையும் (ஒரு தாள்) | 100 |
| 63. | கிறிமினல் சட்டம் (ஒருதாள்) | 100 |

**பிரிவு இ—இலங்கை கடல் கடந்த சேவைக்குரிய பரீட்சார்த்திகட்குக் கட்டாயமானது.**

64. வாய்மொழிப் பரீட்சை (விசேடம்) .. .. .. .. 150 புள்ளிகள்

குறிப்பு (i) —இயற்கை விஞ்ஞானப் பாடங்களை எடுக்கும் பரீட்சார்த்திகள் (பாடம் 41 முதல் 48 உட்பட) பல்கலைக்கழகத் தரத்திலுள்ள ஒரு கழகத்திலிருந்து ஆய்கூடப் பயிற்சிச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். கழகத் தலைவர் சான்றிதழில் கையொப்பமிடல் வேண்டும்.

குறிப்பு (ii)—பூகோளவியல் பாடமெடுக்கும் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகத் தரமுள்ள ஒரு கழகத்தில் அப்பாடத்தில் செயல் முறைப்பயிற்சி செய்துள்ளதாக ஒரு சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** (iii)—ஒவ்வொரு பாடத்திற்குமெனப் பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கியுள்ள புள்ளிகளிலிருந்து வெறும் மேலோடமான அறிவுக்குத் திறமை பாராட்டாதவாறு பரிசோதகர்கள் அவசியமெனக் கருதும் அத்தகைய புள்ளிகள் கழிக்கப்படும்.

**குறிப்பு** (iv)—ஒரு பரீட்சார்த்தியின் எழுத்து தெளிவாகவில்லையாயின் அவருக்குச் சேரும் மொத்தப் புள்ளியிலிருந்து இதன் பொருட்டுப் பல புள்ளிகள் கழிக்கப்படும்.

**குறிப்பு** (v)—சொல்லமைதியுடன் ஒழுங்காகப் பயன்படுமுறையில் திட்பமாக அமையுங் கூற்றுகளுக்கு, மொழிக்கென விசேடமாகவுள்ள 1 ஆம் பாடம் மட்டுமின்றிப் பரீட்சைப் பாடங்கள் யாவற்றிற்கும் திறமை காட்டப்படும்.

**குறிப்பு** (vi)—வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும் சபைக்கு எழுத்துப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் கொடுக்கப்பட மாட்டாது.

### பாடவிதானம்

*பிறவாறு குறிக்கப்பட்டிருந்தாலொழிய எல்லாத் தாள்களுக்கும் மூன்று மணித்தியாலங்கள் கொடுக்கப்படும்.*

### பிரிவு அ

### எல்லாப் பரீட்சார்த்திகட்கும் கட்டாயமானது

1. **கட்டுரை.**—குறிப்பிட்ட 4 அல்லது 5 விடயங்களுள் ஒன்றில் ஒரு கட்டுரை எழுதுதல் வேண்டும். இவ்விடயங்கள் விசேடமாக எந்தக் கல்வித் துறையையும் சார்ந்திராது ஆனால் பரீட்சார்த்தியின் அறிவையும் விவேகத்தையும் சோதிப்பதற்கும் கற்பனைசக்தியையும் எடுத்துரைக்கும் ஆற்றலையும் சோதிப்பதற்குமாக அமைந்திருக்கும். கட்டுரையானது கருத்தின் ஆழத்தையும் அவ்விடயம் பற்றிய புதிய முறைகளைக் கையாளுந் திறனையுங் கொண்டு சீர்தூக்கி ஆராயப்படுவதுடன் அதன் மொழி, நடை ஒழுங்குபடுத்தல் முதலியனவும் ஆராயப்படும். அது தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப்படுதல் வேண்டும்.

குறிப்பு.—(அ) பொருத்தமுடைமை ;

(ஆ) தெளிவுடைமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பரீட்சார்த்திகள் அறிந்திருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் எழுதத் தொடங்குமுன்னர் அவ்விடயம் பற்றி நன்கு சிந்தித்து அதனை உணர வேண்டுமென அறிவுரை கூறப்படுகின்றனர். அவ்விடயத்தை நன்கு ஆராய்ந்தமைக்கும் ஒழுங்கான கருத்துக்களுக்கும் எழுத்தின் தன்மைக்கும் விசேட திறமை கொடுக்கப்படும்.

2. **சுருக்கி எழுதுதல்.**—உரைநடைப் பகுதியொன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ மிக நுட்பமாகச் சுருக்கி எழுதும் பரீட்சார்த்தியின் ஆற்றலைச் சோதிப்பதற்காக ஒரு மணித்தியால வினாத்தாள் கொடுக்கப்படும்.

3. **பொது அறிவு.**—தற்காலத்தில் முதன்மை வாய்ந்ததும் மிக நயப்பானதுமான விடயங்களில்—பண்பாடு, இலக்கியம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம்—ஒரு வினாத்தாள். தெரிந்தெடுப்பதற்கு இலகுவாகப் பல வினாக்கள் இவற்றில் கொடுக்கப்படும்.

4. **வாய்மொழிப் பரீட்சை.**—(பொது) பரீட்சார்த்திகள் ஒரு சபையினால் நேர்முகப் பரீட்சை செய்யப்படுவர். அச்சபையிடம் பரீட்சார்த்தியின் வரலாறு பற்றிய பதிவுகள் இருக்கும். பொதுவாக நயப்பான விடயங்கள் பற்றி அவரிடம் கேள்விகள் கேட்கப்படும். நேர்முகப் பரீட்சையின் நோக்கம் என்னவெனில் அவர் சேரவுள்ள சேவைக்குத் தகுதியுடையவரோவென மதிப்பிடுவதாகும். இவ்வாறு மதிப்பிடுகையில் சபையானது அவரின் விவேகத்திற்கும் விழிப்பான தன்மைக்கும், பண்பிற்கும், தலைமை தாங்கக்கூடிய வல்லமைக்கும் முதன்மை அளிக்கும்.

எழுத்துப் பரீட்சையில் போதிய அளவான உயர் தரத்தையடையும் பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

### பிரிவு ஆ

### விருப்புரிமைப் பாடங்கள்

5. **சிங்களம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—உரைநடையிலுள்ள விவரண, நிகண்டு நூல்களும் செய்யுள் காவியங்களும் தவிர்த்து 12 ஆம் நூற்றாண்டு முதல் இற்றைவரையிலுள்ள சிங்கள நூல்கள்.

மேற்கூறிய நூல்களிலிருந்து எடுக்கப்படும் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவோ அல்லது உரைநடையில் எழுதவோ பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படுவர், அதன் மொழியும் விடயம் பற்றியும் வினாக்கள் கொடுக்கப்படும்.

12 ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரையுள்ள சிங்கள இலக்கியத்தின் வரலாற்றுச் சுருக்கம், உரைநடையில் கட்டுரை.

6. **சிங்களம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—சிங்களக் கல்வெட்டுக்கள், காப்பிய இலக்கியங்கள், உரைநடையும் செய்யுளும்.

மேற்கூறிய நூல்களிலிருந்து எடுக்கப்படும் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவோ அல்லது உரைநடையில் எழுதவோ பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படுவர். அதன் மொழியும் விடயம் பற்றியும் வினாக்கள் கொடுக்கப்படும்.

ஒரு கட்டுரை, ஆங்கிலத்திலும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தல் இலக்கியத்திறனாய்வு.

முற்காலம் தொடக்கம் தற்காலம் வரை சிங்கள இலக்கிய வரலாறு சிங்கள மொழியின் வரலாறு.

சமயத்தினதும் கலைகளினதும் அபிவிருத்தியை விசேடமாகக் குறிப்பிட்டுச் சிங்களப் பண்பாடும் நாகரிகமும் (ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை).

7. **தமிழ் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—இடைக்கால தற்கால நூல்களிலிருந்து மொழிபெயர்ப்பும் அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள்.

மிக முந்திய காலந்தொட்டு தமிழ் இலக்கிய வரலாறு ; உரைநடையில் கட்டுரை.

8. **தமிழ் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்தும் மிகமுந்திய தமிழ் நூல்களிலிருந்தும் மொழிபெயர்ப்புக்கள் இலக்கியத் திறனாய்வு, தமிழ் மொழி வரலாறு, யாப்பு, செய்யுளியல்.

தமிழரை விசேடமாகக் குறிப்பிட்டு மிகப் பழைய காலத்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டு வரையுள்ள திராவிட நாகரிகத்தின் வரலாறு. மிகப் புதுமையான கருத்துக்களைக் கூறுவோர் பற்றிய அறிவுக்குச் சிறப்புத் திறமை காட்டப்படும்.

9. **அரபு (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—இவ் விடயத்திலும் இலக்கணத்திலும் கேள்விகள் உட்பட, இஸ்லாமுக்குப் பிந்திய நூல்களிலிருந்தும் தற்கால அரபு நூல்களிலிருந்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

அரபு மொழியில் உரைநடைக் கட்டுரை. அரபு இலக்கிய வரலாறு.

10. **அரபு (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—7 முவல்லகாட் உட்பட இஸ்லாமுக்குப் பிற்பட்ட இடைக்கால நூல்களிலிருந்து மொழிபெயர்ப்பும், இலக்கண வடிவங்களில் கேள்விகளும்.

அரபு இலக்கிய வரலாற்றின் குறிப்பிட்ட பல விடயங்களுள் ஒன்றில் அரபு மொழியில் கட்டுரை. செய்யுள் இயலிலும் ஓசை பிரித்தலிலும் இஸ்லாமிய நாகரிகத்திலும் கேள்விகள்.

இஸ்லாமுக்கு முற்பட்ட அரேபியா பற்றிய கருத்துக்களையும் புராணக் கருத்துக்களையும் விசேடமாகக் குறிப்பிட்டு செமிற்றிக் சமயங்களின் வரலாறு. மிகப் புதுமையான கருத்துக்களைக் கூறுவோர் பற்றிய அறிவுக்குச் சிறப்புத் திறமை காட்டப்படும்.

11. **சமஸ்கிருதம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—காப்பியங்கள் உட்பட எளிதான வேத நூல்களிலிருந்தும் செம்மொழி இலக்கியங்களிலிருந்தும் மொழிபெயர்ப்புக்கள், அவற்றின் மொழியிலும் விடயங்களிலும் கேள்விகள்.

சமஸ்கிருத இலக்கிய வரலாறு, யாப்பு, செய்யுளியல், தேவநாகிரி எழுத்தில் உரைநடைக் கட்டுரை.

**12. சமஸ்கிருதம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—மெஞ்ஞானவியல், தொழில்நுட்பவியல், இலக்கியம் உட்பட உயர் பாடத்தில் வேத நூல்களிலிருந்தும் செம்மொழி இலக்கிய நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல், அவற்றின் மொழியிலும் விடயத்திலும் வினாக்கள்.

குறிப்பிடப்பட்ட பல விடயங்களில் ஒரு கட்டுரை. கடுமையான ஒரு பகுதியை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தல், அல்லது அதற்குப் பதிலாகச் செய்யுள் இயற்றல், தேவநாகிரி எழுத்திலிருத்தல் வேண்டும்.

வேத நூல், மெஞ்ஞானவியல், தொழில் நுட்ப இலக்கியம் ஆகியவற்றின் வரலாறும், வேத காலத்தின் தொன்மையும் புதைபொருள் கண்டுபிடிப்புக்கள் பற்றிய அறிவும் தேவைப்படும்.

ஆதிகாலம் முதல் கி. பி. 1800 ஆம் ஆண்டுகள் வரை இந்திய சமயம், புராணங்கள், மெஞ்ஞானவியல், இந்தியா பற்றிய சிந்தனைகள் ஆகியவற்றின் வரலாறுமிகப் புதுமையான கருத்துக்கள் பற்றிய அறிவுக்குத் திறமை காட்டப்படும்.

**13. பாளி (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—பாகரண இலக்கியந் தவிர்த்துப் பிடக நூல்களிலிருந்தும் பிடக இலக்கியத்திற்குப் பிற்பட்ட நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல், அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள்.

**உரைநடைக் கட்டுரை**

இலங்கையின் பாளி இலக்கிய வரலாறும், இலங்கையின் பௌத்த சமய வரலாறும்.

**14. பாளி (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—அபிதம்ம நூலும் பாகரண இலக்கியமும் உட்பட கடுமையான பிடக நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல். அவற்றின் மொழி, விடயம், இலக்கணம், மொழியியல் ஆகியவற்றில் கேள்விகள்.

பௌத்த கட்டுப்பாடும் அக்காலத்து இந்திய மெஞ்ஞானவியல் தொடர்பான அறிவும் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பிடப்பட்ட பல விடயங்களுள் ஒன்றில் ஒரு கட்டுரை அல்லது அற்குப் பதிலாகப் பாளி செய்யுளில் மொழிபெயர்ப்பு அல்லது ஏற்ற இலக்கிய நூலை உரைநடையில் மொழிபெயர்த்தல்.

பாளி இலக்கியத்தினது வரலாறும் அதன் தொன்மையும்.

பௌத்த கோட்பாட்டின் வரலாறு, மகாயன பௌத்த அறிவு தேவைப்படும்.
புதுமையான கருத்துக்கள் பற்றிய அறிவுக்குத் திறமை காட்டப்படும்.

**15. ஆங்கிலம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—கீழ்க் கூறப்படும் நால்வரைச் சிறப்பாகக் குறிப்பிட்டு 1600–1732 வரை ஆங்கில இலக்கியம்.
சேக்ஸ்பியர், திறைடன், டொக்டர் ஜோன்சன், ஜெயின் ஓஸ்காட், வேட்ஸ்வெத், கீற்ஸ்.
பின் கூறப்படுபவர்களுள் நால்வரைச் சிறப்பாகக் குறிப்பிட்டு 1832 முதல் தற்காலம் வரை ஆங்கில இலக்கியம்.
ஆணல், ரெனிசன், ஷோ, கொன்ட்ராட், டி. எச். லோறன்ஸ், ரி. எஸ். இலியட்.

விசேடமாகக் கற்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்களின் எல்லா நூல்களையும் விரிவாக அறிந்திருக்குமாறும் அல்லது அவர்களின் நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பகுதிகளை அறிந்திருக்குமாறும் பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட மாட்டார். உதாரணமாக—சேக்ஸ்பியர் என்றால் இன்பவியல் நாடகமான "ஆஸ் யூ லைக்கிற்", துன்பவியல் நாடகமான "கிங்லியர்", பிற்கால நாடகமான "ரெம்பஸ்ட்" போன்றவற்றைக் கற்று அவை போன்ற பிறவற்றையும் அறிந்திருத்தல் வேண்டுமெனக் கருதப்படும்.

விசேடமாகக் கற்பதற்கென எதிர்பார்க்கப்பட்டுள்ள எழுத்தாளர்களின் நூல்களிலுள்ள விடயங்களை விளக்கும் பொழுது அவ்வாசிரியர்களின் பெரு நூல்களிலிருந்து அவை எடுக்கப்படல் வேண்டும். கீழ்ப் பிரிவுக்குத் தரப்பட்டுள்ள இரு பெரும் பகுதியான காலத்திற்குரிய இலக்கிய அபிவிருத்தி பற்றிய அறிவு பரீட்சார்த்திகளுக்குத் தேவைப்படாது. எனினும், அவர்கள் மொழியை நன்கு கற்றுள்ளார் எனத் தமது விடைகள் மூலம் காட்டுமாறு எதிர்பார்க்கப்படுவர்.

**16. ஆங்கிலம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—பின்வருவோரை விசேடமாகக் கற்று 1550–1660 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.
ஜோசர், ஸ்பென்ஸர், சேக்ஸ்பியர், பென்ஜோன்ஸர், டொன், மில்ரன், வில்ஸ்ரர்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1660–1798 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.
பிறைடன், கோப், சுவிப்ற், அடிசன், டொக்டர் ஜோன்சன், பீஸ்டின், போக்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1798–1880 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.
வேட்ஸ் வேத், கீற்ஸ், ஷெலி, ஜேன் ஒஸ்ரின், ரெனிசன், ஆணல் டிக்கள்ஸ்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1880 முதல் தற்காலம் வரையுமுள்ள ஆங்கில இலக்கியம்.
கொப்கின்ஸ், ஷோ, கொன்ராட், ஜொயிஸ், டி. எச். லோரன்ஸ், ஈ. எம். வேஸ்ரர், ரி. எஸ். இலியட்.

மேற்கூறிய தொகுதிகள் ஒவ்வொன்றிலும் விசேட கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் குறைந்தது நால்வரைப் பற்றிய அறிவைப் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய எழுத்தாளர் ஒவ்வொருவரின் நூலிலிருந்தும் எடுக்கப்படும் பகுதியை அறிந்து திறனாய்வு செய்யும் வல்லமையைச் சோதிப்பதற்கு உள்ள கட்டாயமான வினாவுக்கு விடை கூறுமாறும் எதிர்பார்க்கப்படுவர். (மற்றக் கேள்விகளிலும் இதற்கு விசேட திறமை கொடுக்கப்படும்) விசேடமாகக் கற்பதற்கெனவுள்ள ஒவ்வொரு காலத்தின் பிரதான இலக்கியப் போக்கை எடுத்துக் காட்டும் ஒரு பகுதியைத் திறனாய்வு செய்வதற்கு ஒரு கேள்வி இருக்கும். அத்தகைய காலத்தின் சமூக இலக்கியச் சூழ்நிலை பற்றிய அறிவும் தேவையெனக் கருதப்படும். இப்பாடத்தை எடுக்கும் பரீட்சார்த்திகள் ஆங்கில மொழியில் தமக்குள்ள வல்லமையையும் அதன் பிரதான இலக்கியத்தை வாசித்துள்ளமையும் பரீட்சார்த்தியிடமிருந்து எதிர்பார்க்கப்படும்.

**17. இலத்தீன் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—இலத்தீன் நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பு—அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள் ;

உரைநடைக் கட்டுரையும் இலத்தீன் இலக்கிய வரலாறும்.

**18. கிரீக் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—கிரீக் நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழிபெயர்ப்பு. அவற்றின் மொழியிலும் விடயதிலும் கேள்விகள்.

உரைநடைக் கட்டுரையும் கிரீக் இலக்கிய வரலாறும்.

**19. செம் மொழி இலக்கியங்கள் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—உயர்ந்த கட்டத்திலுள்ள கிரீக் நூல்களிலிருந்து முன்னம் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பும் கிரீக் மொழியில் உரைநடை அல்லது செய்யுள் கட்டுரையும் (ஒருதாள்) உயர் கட்டத்தில் இலத்தீன் நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பும் உரைநடையில் அல்லது செய்யுளில் அல்லது இவ்விரண்டிலும் இலத்தீன் கட்டுரைகளும் (ஒருதாள்).

கிரீக் நாகரிகத்தினதும் உரோமன் நாகரிகத்தினதும் வரலாறு, இலக்கியம், புவியியல், சமூகவியல், அரசியல், சமயம், விஞ்ஞான அபிவிருத்திகள், (இரு தாள்கள்).

உரோமன் வரலாறு கி. மு. 132 முதல் கி. மு. 143 வரையுள்ள காலம் பிரதானமானதாகும். இலத்தீன் இலக்கியத்தில் சிசரோனிய காலமும் ஒகஸ்ரின் காலமும் பிரதானமானதாகும். கிரீக் வரலாறு கி. மு. 519 முதல் கி. மு. 430 வரையுள்ள காலம் பிரதானமாகும். கிரீக் இலக்கியத்தில் அட்ரிக் நாடகாசிரியர்களும் எழுத்தாசிரியர்களும் முக்கியமானவர்களாம்

புதுமையான கருத்துக்களுக்குச் சிறப்புத்திறன் கொடுக்கப்படும்.

**20. பிரெஞ்சு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—தாள் I—17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையுள்ள பிரான்ஸ் இலக்கியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை முன் ஆயத்தஞ் செய்யாது மொழி பெயர்த்தல் ; உரைநடைக் கட்டுரை.

**தாள் II.**—பின்வரும் எழுத்தாளர்களுள் நால்வரை விசேடமாகக் குறிப்பிட்டு 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையுள்ள பிரஞ்சு இலக்கியம் :

மோலியர், ரசீன், ரூசோ, கியூகோ, புளோபேட், போடிலயர், ஹைட், சிரோடோ.

விசேடமாகக் கற்பதற்கெனத் தற்போதுள்ள ஆசிரியர்கள் பற்றிய கேள்விகளுக்குரிய விடைகள், அவர்களின் பிரதான நூல்கள் பற்றிய வரலாற்றின் அறிவைக் காட்டுதல் வேண்டும். பிற பெரிய நூல்களிலிருந்தும் மிகப் பொதுவான தன்மையுள்ள வினக்களைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்புக்களை பரீட்சார்த்திகள் பெறுவர்.

ஒரு கேள்விக்குப் பிரெஞ்சு மொழியில் விடை எழுதல் வேண்டும்.

**21. வரலாறு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—நான்கு தாள்களில் பரீட்சார்த்திகள் இரண்டுக்கு மேற்படாமலோ குறையாமலோ அவற்றுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

- **தாள் I** —கி. பி. 320 வரை இந்திய வரலாறு.
- **தாள் II** —இலங்கை வரலாறு.
- **தாள் III** —1789 முதல் ஐரோப்பிய வரலாறு.
- **தாள் IV** —இந்தியக் குடாநாட்டு வரலாறு ; அல்லது 1707–1947 வரை இந்திய வரலாறு.

**22. வரலாறு (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—எட்டுத்தாள்களுள் பரீட்சார்த்திகள் நான்கு தாள்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

- **தாள் 1**—320–1050 வரை இந்திய வரலாறு.
- **தாள் 2**—1050–1526 வரை இந்திய வரலாறு.
- **தாள் 3**—இந்திய அரசியலும் சமூகவியல் கொள்கைகளும் நிறுவனங்களும்.
- **தாள் 4**—இந்தியாவுக்கு வெளியே இந்தியக் குடியேற்ற முயற்சிகளும் பண்பாட்டு முயற்சிகளும்.
- **தாள் 5**—1760 முதல் பிரித்தானிய வரலாறு.
- **தாள் 6**—பிரித்தானிய குடியேற்ற வரலாறு.
- **தாள் 7**—ஐரோப்பிய அரசியற் கொள்கை வரலாறு.
- **தாள் 8**—1796 முதல் இலங்கை வரலாறு.

**23. பொருளியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—வரையறை, நோக்கம், முறை உட்படப் பொருளியல் தத்துவங்கள், பொருளியல் முறைகள், உற்பத்திக் கொள்கை, பயன்தரும் முயற்சிகளின் வகை, சந்தை முறை, விலை நிர்ணயித்தல், தனியுரிமையும் போட்டியும் பற்றிய விளைவுகள், அதன் பருமனைத் தீர்மானிக்கும் தேசிய வருவாய்ச் சக்திகள், சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் கடமை, தேசிய வருமானத்தைப் பகிரல், பொருளாதார வாழ்க்கையில் அரசின் பங்கு, பொது நிதி.

பணத்தின் தன்மையும் வரையறையுமுட்பட்ட வங்கித் தொழிலும் நாணயமும், விலைமாற்றக் கொள்கைகள், நாணய முறை, வங்கியின் தொழில், மத்திய வங்கித் தொழில், நாணயத் தாபனத்தினதும் கொள்கையினதும் சிக்கல்கள், சர்வதேச பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல், செல்மதி நிலுவை, நாணயமாற்று வீதங்கள்.

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளின் இங்கிலாந்து, பிரான்சு, சேர்மனி, உருசியா, அ. ஐ. அரசுகளின் பொருளியல் வரலாறு உட்படத் தற்காலப் பொருளியல் வரலாறு.

**24. பொருளியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—பத்துத் தாள்களுள் முதல் இரண்டு வினாத்தாள்களுக்கும், மற்றைய எட்டு வினாத்தாள்களுள் இரண்டிற்கும் பரீட்சார்த்திகள் விடை எழுதுதல் வேண்டும்.

**தாள் 1**—கீழ்ப்பிரிவிலுள்ளதிலும் உயர்ந்த கட்டத்தில் பொருளியல் தத்துவங்கள்.

**தாள் 2**—இலங்கையிலும் உலகத்திலுமுள்ள தற்காலப் பொருளாதாரச் சிக்கல்கள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவையும் விளக்கத்தையும் சோதிப்பதற்காகத் தற்காலப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒரு வினாத்தாள். தற்காலப் பொருளாதாரச் சஞ்சிகைகளையும் சாதனங்களையும் பற்றி சித்தரித்தல் வேண்டும்.

**தாள் 3, தாள் 4** — உயர்ந்த நாணய வங்கிக் கொள்கை, நாணய வரலாறும் அமைப்பும், சர்வதேச வியாபார நிதி முறை.

**தாள் 5, தாள் 6** — 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளை விசேடமாகக் குறிப்பிட்ட ஐரோப்பா, அ. ஐ. அரசு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பொருளியல் வரலாறு.

**தாள் 7, தாள் 8** — கணிதப்புள்ளி விவரமும், அதனைப் பொருளியல் துறையிலும் வர்த்தகத் துறையிலும் பிரயோகித்தல்.

**தாள் 9, தாள் 10** — உலகத்தின் தலைமையான அரசுகளின் அமைப்பும் நிர்வாகமும், அரசியல் சமூகவியல் கொள்கையும். அரசியல் கருத்துக்களின் வரலாறு.

**25. அரசியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் :—**

**தாள் 1—சமூக, அரசியல் கொள்கைகள்.**—தேசிய அரசுகளின் கொள்கைகள், மக்கியாவெல்லி, போதின், ஒப்சு, லொக், றூசோ, பரந்த கொள்கையுடைமை; சமூகவுடைமை, (மாக்கிசம் உட்பட) ஆகியனவும் இவற்றையொத்த கொள்கைகளும், பாசிசம், தற்கால அரசின் சுதந்திரம், உரிமைகள், சமவுடைமை, சொத்து, தேசிய உரிமை பற்றிய கொள்கைகள்.

**தாள் 2—இலங்கை அரசியல் முறைமை (1833 இலிருந்து).**—இலங்கையரிடையே அரசியல் உணர்வு வளர்ந்தமை, தேசிய உணர்வின் எழுச்சி, தேசிய சுதந்திர இயக்கம்.

அரசியல் நிறுவனங்களும் அவற்றின் தோற்றமும். மக்கள் அரசியலில் பங்குபற்றல்.

அரசியல் அமைப்புக்களும் நெருக்கடித் தொகுதிகளும், 1931 இலிருந்து அரசாங்கக் கடமைப் பொறுப்புக்களும்.

**26. அரசியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்—**

**தாள் I—ஒப்பியல் அரசாங்கமும் அரசாங்கத் தத்துவங்களும்.**—ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கிய அரசுகள், ஐ. ச. சோ. கு., பிரான்சு, சுவிற்சலாந்து, அவுத்திரேலியா, கனடா, ஸ்கந்திநேவியா, யப்பான், சீனா, இந்தியா

தற்கால அரசாங்கங்களின் நிருவாக, சட்ட, நீதிமுறை முறைமைகள், நிருவாக முறைமைகள், பிரதிநிதித்துவ முறைகள்.

**தாள் II—சர்வதேசத் தொடர்புகள்.**—1914 இல் இருந்து பிரதான நாடுகளுக்கிடையே சர்வதேசத் தொடர்புகள்.

சர்வதேச நேயக்குழு, ஐ. நா. தா. ஆகியனவும் அவற்றுடன் இணைந்துள்ள பிற நிறுவனங்களும்.

1945 இல் இருந்து சர்வதேச அரசியலைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள்.

**தாள் III—உயர்ந்த அரசியல் கோட்பாடுகள்.**—1. பண்டை இந்திய அரசியல் கோட்பாடு (இந்து, பௌத்த) கிரேக்கர், புளேட்டோ, அரிஸ்ரோரல் நகர அரசு பற்றிய எண்ணங்கள், பண்டை உரோமன் அரசியல் சிந்தனையாளரும் சட்ட நிபுணருமாகிய ஒகஸ்தீன், தொமக அகுனசு, தாந்தே, மார்சிலியோ, சீர்திருத்த இயக்கம், லூதர், கல்வின் நொக்சு.

**தாள் IV—உயர்ந்த அரசியல் கோட்பாடுகள்.**—மக்கிய வெல்லி, போதின்.

ஆங்கிலப் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாளர் பிரெஞ்சு அறிவொளிக்குக் காரணமான அரசியல் கோட்பாட்டாளர், அமெரிக்க அரசியல் யாப்புக்குத் தந்தையாகவுள்ளோர்.

ஒக்ரோபர் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாளர்.

சீனப் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாளர்.

27. **சமூகவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.—**

**தாள் I—சமூகவியல் தத்துவங்கள்.**—சமூகவியல் விசாரணைத் துறையே வரையறுத்தல் சமூக நடத்தையின் உயரினவியல் சாதி, பூகோளவியல்,விளக்கங்களைக் கொண்டு அதனை மதிப்பிடல் சமூகவியலுக்கும் பிற மனிதப் பண்புக்கல்விக்கும் சமூக விஞ்ஞானதுக்குமுள்ள தொடர்பு சமூகம், பண்பாடு, ஆண்மை, அடிப்படைச் சமூகக் கோட்பாடுகள் ஆகியவற்றின் பாகுபாட்டு வேற்றுமை ; சமூக அமைப்பு, நிறுவகங்கள், படைபடையாகப் பிரித்தல், சமூகக் கட்டுப்பாடு, தொகுதி அமைப்பு, சமூக ஒருப்பாடு, சமூக மாற்றம் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கையளவு ஒழுங்குபடுத்தல்.

**தாள் II—சமூகப் பிரச்சினைகளும் சமூக நிர்வாகமும்.**—குற்றம் பற்றிய கொள்கை குற்றவியல் முறைகள், குற்றத்தடுப்புப் பிரச்சினைகள் பற்றிய இனம்பற்றிய கொள்கை ; சாதிக்கிளர்ச்சிச் சமூகவியல்.

சமுதாயநிலைப் புள்ளிவிபர ஆய்வு, ஆசிய நாடுகளை விசேடமாகக் கூறி, சனத்தொகை வளர்ச்சியும் பிரச்சினைகளும்.

சமூக சேவைகளின் வளர்சியும் தன்மையும் சமூக சேவை நிர்வாகமும்.

" சமூக சேவை ", " நலன்புரி சங்கம் " ஆகிய கொள்கைகளின் கருத்து ; தொழில் வயோதிபம், கல்வி, தீரச்செயல், சௌக்கியமும் நோயும், உழவர் பொருளாதாரப் பிரசினைகள் முதலியனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிட்டு சமூக தேவைகளையும் ஏற்பாடுகளையும் ஆராய்தல். இலங்கையை விசேடமாக ஆராய்தல் வேண்டும்.

28. **சமூகவியல் (உயர்வியல்) நான்கு தாள்கள்.—**

**தாள் I—ஒப்பியல் சமூக நிறுவகங்கள்.**—உறவும் குடும்பமும் ; சமூகப் பாகுபாடு (வர்ணம், குலம்), சமயம், பொருளியல் அமைப்பு, அரசியல் அமைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்தல். பணித்துறை ஆட்சியும் முறையான அமைப்புக்களும் பற்றிய கொள்கை, ஒப்பியல் ஆய்வின் நோக்கமும் முறையும்.

**தாள் II—இலங்கையர் விசேடமாகக் குறிப்பிட்டுத் தென் ஆசியா.**—உழவர் சமூகம், சமுதாயம் என்பதன் வரைவிலக்கணம், சமுதாய ஆய்வு பற்றி மீளவாய்தல். உழவர் சமுதாயத்தை ஆராய்வதற்குக் கொள்கையளவு வேலைத்திட்டம்.

இந்தியா, இலங்கை பிற தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகள் ஆகியவற்றின் உறவுமுறையும் சமூகப் பாகுபாடும்.

உழவர் சமூகப் பொருளாதார இயல்புகள், பெறுமான முறைகளும் பிற தாபன இயல்புகளும்.

இந்து சமய, புத்த சமய சமூகவியல், அதன் ஒற்றுமையும் வேற்றுமையும்.

இலங்கை மரபு வழிச் சமுதாயத்தின் வரலாற்றுப் பாகுபாடு, மானிய முறையும் 19 ஆம் நூற்றுண்டின் சமுதாய மாற்றமும்.

அபிவிருத்தி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினைகள்.

**தாள் III—சமூகவியலில் கொள்கைகளும் முறைகளும்.**—கொம்ரே காலம் முதல் சமூகவியல் வளர்ச்சி, உரு மலர்ச்சி, பரவல், தொழிற்படல் புதிய மலர்ச்சி, பற்றிய கொள்கைகள், தேர்கீம், வீபர், சிமெல், பரேரோ ஆகியோரும் 20 ஆம் நூற்றுண்டு மானிடவியலார், சமூகவியலாரும் கொள்கையளவில், அளித்துள்ள பங்கு. உ-ம். மலிநொஸ்கி, ரட்கிளிவ்–பிரவுண், போஸ், ஒப்புகவுசு, பார்சன்ஸ்.

**விஞ்ஞான முறை.**—விஞ்ஞான முறை விசாரணையும் உய்த்துணர்வும், தொகுதியறியுந் தன்மை பரிசோதனை முறைகள் சமூகவியல் பரிசீலனைகளில் விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்தல்.

சமூகவியலிலும் மானிடவியலிலும் வெளிக்கள நுட்பங்களும் செயலறிவு முறைகளும் (குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் பரீட்சார்த்திகள் ஓர் ஆராய்ச்சி முறையை உருவாக்குமாறு வேண்டப்படலாம்.)

**தாள் IV—சமூக உளவியல்.**—ஆண்மை உருவாக்கம், சமுதாயப்படுத்தல், பண்பாடும் ஆண்மையும், தேசிய இயல்பு ஆகியவற்றில் சமூக காரணிகள், ஆண்மை அபிவிருத்தி, கற்றல், காண்டல், நோக்கம் ஆகியவற்றின் கொள்கைகள். சிறிய தொகுதி ஆராய்ச்சியுட்பட தொகுதி அமைப்பினதும் இயக்கத்தினதும் உளவியல் சார்ந்த பாகுபாடு. பொது அபிப்பிராயம் உருவாக்கப்படுவதைப் பாதிக்கும் காரணிகள். விவேகத்தில் தனிப்பட்ட, தொகுதியான வேற்றுமைகள். உளவியல் பரிசீலனையில் உபயோகிக்கப்படும் முறைகளும் நுட்பங்களும்.

**தாள் V—சமூக மனிதரியல்—**

(அ) சமூக மனிதரியலின் நோக்கமும் முறையும், அடிப்படைக் கொள்கைகள். (உ-ம்.—சமூகம், சமூக அமைப்பு, சமூக நிறுவனம் பணியும் பண்பாடும்) பண்பாட்டு வளர்ச்சி, பகிர்வுக் கல்வி, பண்படுத்தலும் பண்பாட்டு மாற்றமும்.
(ஆ) மோர்கன், விரேசர், ரைலர், றிவேசு, இலியற் சிமித் ஆகியோரை விசேடமாகக் குறிப்பிட்டு சமூக மனிதரியலின் வரலாறு.
(இ) மனிதரியலில் அண்மையில் தோன்றியுள்ள போக்குகள். மலிநோஸ்கி, ரட்கிளிவ்வே, பிரேளன், இவான்சு—பிறிற்சாட் ஆகியோரின் நூல்களை விசேடமாகக் குறிப்பிட்டு தொழிற்பாட்டு அணுகு முறைமை.
(ஈ) தென்கிழக்காசியாவின் சமூக மனிதரியல்.

29. **பூகோளவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்—**

**தாள் I**—(அ) பௌதிகப் பூகோளவியல் தத்துவங்களும் (தரை, அமைப்பு, வடிகால், இயற்கைத் தாவரம், மண், காலநிலை வானிலை, மனித பூகோளவியலிலும் மனிதர் பரவியிருத்தல், இடம் பெயர்ப்பு, சமூகம், பொருளாதாரம்).
(ஆ) இந்தியப் பிரதேசத்தின் (இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை) அல்லது ஐரோப்பாவின் பிரதேசத்தின் பூகோளவியல் பௌதிக, மனித பொருளாதாரம் அல்லது ஆங்கிலோ—அமெரிக்காவில் பிரதேசப் பூகோளவியல், பௌதிக மனித், பொருளாதாரம்.

**தாள் II**—பொதுவான படவேலை—இடவிவரப் படங்கள் (இலங்கை, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அரசுகள்) ; ஆரம்ப நில அளவை (சங்கிலி, மட்டத்தளரேகை, பட்டகமான கொம்பாசு) ; எறியும் (" பொதுப்பண்பு " எளிய அமைப்பு), வரைப்படம் (ஆரம்பப் புள்ளிவிவரத் தரவைத் தருதல்).

30. **பூகோளவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்—**

**தாள் I**—(அ) உயர்ந்த நிலவியல் பிரிவு (அடிப்படைப் புவிச் சரிதவியலுடன்) ; நில அமைப்புக்களின் தோற்றமும் விருத்தியும்.
(ஆ) உயர்ந்த வானியல் (அடிப்படை வனிலையுடன்) ; கலநிலைப் பிரதேசக் கொளகைகள், உலகக் காலநிலைப் பகுபாடும் முறைகளும் கலநிலைமற்றங்ளும்

அல்லது (இ) உயர்ந்த உயிரின பூகோளவியல் அல்லது விவசாயப் பூகோளவியல.

**தாள் II**—(அ) பொருளாதாரப் பூகோளவியல் முதன்மையான உற்பத்திகள் மின்வலு வளங்கல் கைத்தொழில் வியாபார நிலையங்கள், உள்நாட்டு, சர்வதேச வியாபாரங்கள்.
(ஆ) அல்லது ஆசியப் பிரதேசப் பூகோளவியல (ஐ.சோ.ச.கு.) அலலது இலத்தீன் அமெரிக்கர், பௌதிகம், மானிடர், பொருளாதாரம், வரலாறு ஆரசியல் அல்லது பூகோளவியல் கண்டுபிடிப்பு, புத்தாய்வு, கருத்து ஆகியவற்றின் அபிவிருத்தி.

**தாள் III**—(அ) இலங்கை, இந்தியாவின் பிரதேசப் பூகோளம், பௌதிகம், மானிடர், பொருளாதாரம், வரலாறு, அரசியல்
(ஆ) அல்லது ஆபிரிக்கா, அவுஸ்திரேலியாவின் பிரதேச பூகோளம் அல்லது ஒப்பியல் பிரதேசக் கல்வியும் அரசியல்பூகோளம் அல்லது பிரயோக பூகோளவியலும் நவீன பூகோளவியற் பிரச்சினைகளும்.

**தாள் IV**—(அ) நிலப்படவியல், வானத்திலிருந்து படம் பிடித்தல், புவிச்சரிதவியல், படங்கள், நிலப்படங்கள், நில அளவை, எறியமும் குறிவரைக் கணிப்பியலும்
(ஆ) பட அமைப்புப் பற்றிய நுட்பங்களும் பிரயோகமும்.

31. **புதைபொருளியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்—**

**தாள் I**—புதைபொருள் அகழ்வு பற்றிய அடிப்படைத் தத்துவங்கள், இலங்கையில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் ஆகியவற்றின் வரலாறு.

**தாள் II** மிகப் பழைய காலந்தொட்டு கி. பி. 1505 வரை கல்வெட்டுக்களும் பழைய சுவடிகளும். இலங்கை நாணயங்களும்.

32. **புதைபொருளியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்—**

**தாள் I**—வரலாற்றுக்கு முற்பட்டவை, புதைபொருள் அகழ்வு பற்றிய அடிப்படைத் தத்துவங்களும், இலங்கையில் கட்டிடக்கலையின வரலாறும்

**தாள் II**—இலங்கையில் சிற்பக்கலையினதும் ஓவியத்தினதும் வரலாறு.

**தாள் III** —இலங்கையில் பிரபாகுமி கல்வெட்டுக்கள்.

**தாள் IV** —கி. பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 1505 ஆம் ஆண்டு வரை கல்வெட்டுக்களும் பழைய சுவடிகளும் இலங்கை நாணயங்களும்.

33. **மனிதரியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்—**

**தாள் I**—பொது, உடலியல் சார்ந்த மனிதரியல்.

(அ) **பொது மனிதரியல்.**—உடல்சார்ந்த மனிதரியல் பற்றிய நோக்கமும் அவை பற்றிய கல்வியின் அடிப்படை முறைகளும், வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியலும், சமூக மனிதரியலும். மனிதரியலின் அடிப்படைக் கொள்கைகள்.

(ஆ) **உடல்சார்ந்த மனிதரியல்.**—மிக முக்கியமான மனித உயிரற்ற பொருள், மானிடரின் தொற்றம், தோற்றம் பற்றிய பொதுக் கொள்கைகள், மக்கள் இனம் பற்றிய ஒப்பனவுக் கருவி; மானிட இனங்களை பாகுபடுத்திப் பகிரல், பிறப்புமரவு பற்றிய ஆரம்ப நூல்.

பகுதி II—வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியலும் சமூக மனிதரியலும்.

(அ) **வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியல்.**—பழைய கற்கால, இடைக்கால, புதிய கற்கால யுகங்களினது புதைபொருளியல்.

(ஆ) **சமூக மனிதரியல்.**—பண்பாட்டினதும் சமூகத்தினதும் இயல்பு, எளிய சமூகங்களில் சமூக தாபனங்களின் தத்துவங்கள் எளிய சமூகங்களின் சமயம், உறவுமுறையை, அரசியல் நிறுவனங்கள்.

34. **பௌத்த நாகரீகம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்—**

**தாள் I**—பௌத்த சமயம் தோன்றியபோது பண்டை இந்தியாவின் சமயமும் சமூகமும் தற்காலிக அபிவிருத்தி உட்பட இந்தியாவில் பௌத்தத்தில் ஏற்பட்ட தாக்கமும் அதன் வரலாறும்.

**தாள் II**—ஆதிப் பௌத்த பிரிவுகளும் இந்தியாவுக்கு வெளியே பௌத்த பரம்பலும். தற்காலம்வரை அது உட்பட இலங்கை வரலாற்றில் பௌத்தம்.

35. **பௌத்த நாகரீகம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்—**

**தாள் I**—ஆதி பௌத்த நிறுவனங்கள், சங்கமும் துறவி மடத்தாபனங்களும், வினயவும், திருச்சபை சார்ந்த நடைமுறையும். பொதுமக்கள் சமுதாயமும், அதன் சமூக அமைப்பும் பௌத்த ஆராதனையும் சமய சடங்குகளும், பௌத்தத்தின் சமூகவியல்.

**தாள் II**—பின்வருவனவற்றில் எவ்விரண்டு பிரதேசத்தினதும் பௌத்த கலையும் கட்டிடக்கலையும்—

(அ) இந்தியா, பாகிஸ்தான், இலங்கை.

(ஆ) தென்கிழக்காசியா.

(இ) திபெற்றும் மத்திய ஆசியாவும்.

(ஈ) சீனு; யப்பான்.

**தாள் III**—சமூக நிறுவனங்கள், பண்பாடு, சட்டம் அரசியல் ஆகியவற்றில் பௌத்தம் செலுத்திய செல்வாக்கை விசேடமாகக் குறிப்பிட்டு, அல்லது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பண்டை மத்திய கிழக்கு, தென் கிழக்காசியா ஆகியவற்றில் பௌத்தம் பரம்பியமை அல்லது பௌத்தத்தின் தாக்கம்.

**தாள் IV**—திபெற், மத்திய ஆசியா, சீனு, கொரியா, யப்பான், தற்கால உலகம் ஆகியவற்றில் பௌத்தம் பரம்பியமை.

36. **மெஞ்ஞானவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள்.**—மேனட்டவர் மெஞ்ஞானவியலின் வரலாறு.

(அ) அறிவியல் காலத்தை விசேடமாகக் குறிப்பிட்ட கிரேக்க மெஞ்ஞானம், சோபிஸ்ருக்கள், சொக்கிரேற்றிஸ், பிளேரோ, அரிஸ்ரோற்றில் பிற்கால அறநூல் காலம் புதிய பிளரோனிசம்.

(ஆ) இடைக்காலம், சென். ஒகத்தின், ஸ்கொரஸ், இயூஜின், அன்செலெம், தொமசு அக்குவினஸ், சென். போனு வெந்தர், டன்ஸ் ஸ்கொரசு, அரிசுதோத்திள் மீட்டல் உலகில் பிரச்சினைகள் முதலியன விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

(இ) தற்கால மெஞ்ஞானம், மறுமலர்ச்சி, (புரோனே; பேக்கஸ், ஒப்ஸ்) பகுத்தறிவு முறைகள் (டெஸ்காாிசு ஸ்பைனேசா லீப்னிற்ச, எம்பிரிசிசம், ஒளிபெறல் (லொக், பேக்லி கியூம்) சேர்மன் குறிக்கோள் (கான்ற், பிசர், செலின், ஹேகல்) ஆகியவற்றை முதன்மையாகக் குறிப்பிடல் வேண்டும்.

**ஒழுக்கவியல்.**—ஒழுக்கம், பண்பு, சமயம் ஆகியவற்றின் இயற்கையும் நோக்கமும் ; ஒழுக்க முறை அறிவுப் பிரச்சினை, ஒழுக்க முன்னேற்றம், வழக்க முறையான ஒழுக்கம், ஒழுக்கக் கொள்கையின் பொதுத் தத்துவம், பகுத்தறிவு வாதம், அடோனிசம், என்டோமனசம், ஒழுக்க வழக்கம், ஒழுக்கங்கள், பால் பற்றிய வாழ்க்கை, சமூகக் கழகங்களின் தன்மை.

37. **மெஞ்ஞானவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.—தாள் I ம், II ம்** தர்க்கவியலும் அறிவாதாரவியலும்.—தர்க்கவியல், அறிவாதாரவியல் பிரச்சினை : அறிவின் தோற்றக் கொள்கைகள், அறிவுப் பிரச்சினை, கொள்கைகளின் கோட்பாடு தீர்ப்பு, அனுமானம் முறையான தர்க்கவியல், பொருண்மை சாராத தர்க்கவியல், கணிதத் தர்க்கவியல், தர்க்கவியல் உண்மை, உண்மையின் தன்மை, அறிவு, உண்மையின் பற்பல கொள்கைகள், உண்மையின் சோதனை.

**உளம் பற்றிய மெய் விளக்கவியல்.**—உளம் பற்றிய மெய் விளக்கவியலுக்கும் அறிவாதார இயலுக்குமுள்ள தொடர்பு. உளம் பற்றிய மெய் விளக்கவியலின் பொதுவான பிரச்சினைகள், சமகால மெஞ்ஞானவியல், உண்மையில், புதிய-உண்மையில், பிளேரோவின் கருத்தியற் கோட்பாடு, பேக்லி, காண்ற், ஹேகல் ஆகியோரின் கருத்தியற் கோட்பாடு. கடவுளும் படைப்பும், மொழி விளக்கம், விஞ்ஞான மெய் விளக்கவியல்.

**உளவியல் அல்லது இந்திய மெஞ்ஞானவியல்.**—இவ்விரு பிரிவுகளில் ஒன்றைப் பரீட்சார்த்திகள் எடுக்க வேண்டும்.

**தாள் III, IV உளவியல்.**—உளவியல் தன்மையும் நோக்கமும், உளவியல் முறை, உளம் உடல் தொடர் கொள்கைகள், உணர்ச்சி, காண்டல் ஞாபகம், கற்பனை, கோட்பாட்டுச் சிந்தனை, கருதாச் செய்கை, இயல்புணர்ச்சி விவேகம், மன உணர்ச்சி, மனக் கிளர்ச்சி, உணர்ச்சிக் களிவு, மனத்திட்பம், ஆண்மை, விலங்கின் உளவியல், மனித உளவியல்; தனிப்பட்டோர் சமூக உளவியல், பிரயோக உளவியல், உளவியல் பற்றிய சம கால எண்ணங்கள், நடத்தை, ஓமிக் உளவியல் கெஸ்ரால் உளவியல், ஸ்பியமன் உளவியல், உளவியல் பாகுபாட்டுப் பிரிவுகள், பிறெயிட், அட்லர் ஜங்.

**மாற்றுன தாள்கள் III ம், IV ம் இந்திய மெஞ்ஞானவியல்.**—வேதங்கள், உப நிடதங்களின் சமயமும் மெஞ்ஞானமும், பகவத் கீதையினதும் காப்பியங்களினதும் போதனைகள், பௌத்தம், சமணம் ஆகியவற்றிற் தோற்றமும் வளர்ச்சியும் இந்திய உலோகாயுதம் (சர்வக்காரர்) தார்சன காலம். நியாய, வைசேஷித கோட்பாடுகள், மீமாம்ச கோட்பாடு, சமணர்களின் அநேகாந்த வாதம், பௌத்தர்களின் மூந்திய இனயன கொள்கை, சாக்கியம், யோகம், மகாயன வேதாந்தக் கொள்வகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்.

சங்கரின் அத்துவைத வேதாந்தத்தின் முறை பற்றிய அல்லது பௌத்தரின் மகாயன கோட்பாடு அல்லது தொடக்கக் காலப் பௌத்தம் ஆகியவற்றை விரிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

38. **தூய கணிதம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—அட்சர கணிதம் (சிக்கலான எண் உட்பட) திரிகோண கணிதம், கேத்திர கணிதம், வகையீட்டு நுண் கணிதம், வகையீட்டுச் சமன்பாடு. இவ்விரு தாள்களும் முற்றுன பாடவிதானத்திலிருந்து கேள்விகளைக் கொண்டிருக்கும்.

39. **பிரயோக கணிதம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—ஒரு துணிக்கையினதும் விறைப்பான பொருளினதும் நிலையியலும் இயக்கவிசையியலும். நீர்நிலையியல், ஈர்ப்பு விதி. இவ்விரு தாள்களும் முற்றுன பாடவிதானத்திலிருந்து கேள்விகளைக் கொண்டிருக்கும்.

40. **தூய கணிதம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—அட்சர கணிதம் (மற்றீசு உட்பட) கேத்திர கணிதம் வகுப்பு, வகையீட்டுச் சமன்பாடுகள், நிலையியல், இயக்கவிசையியல், ஈர்ப்பு விதி, மின்சக்தி மக்னெரிசிம்.

**தாள் I, தாள் II,** தூயகணிதத்திலும் **தாள் III, IV** பிரயோக கணிதத்திலுமாக ஒவ்வொரு தாளும் முற்றுன பொருத்தமான பாடவிதானத்தில் கேள்விகளைக் கொண்டிருக்கும்.

41. **பௌதிகவியல் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—பொதுப் பௌதிகம், வெப்பம், வெப்ப இயக்கவிசையியல், அக்கூஸ்ரிக்ஸ்.

42. **பௌதிகவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—பொதுப் பௌதிகம், வெப்பமும் வெப்ப இயக்க விசையில் அக்கூரிக்ஸ்.

43. **இரசாயனவியல் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—

**தாள் I**—பொது, அசேதன உறுப்பு இரசாயனவியல், பௌதிக இரசாயனவியல்.

**தாள் II**—சேதனவுறுப்பு இரசாயனவியல்.

44. **இரசாயனவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—

**தாள் I**—பொது, அசேதன உறுப்பு இரசாயனவியல்.

**தாள் II**—பௌதிக இரசாயனவியல்.

**தாள் III**—சேதனவுறுப்பு இரசாயனவியல் I.

**தாள் IV**—சேதனவுறுப்பு இரசாயனவியல் II.

45. **தாவரவியல் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—

**தாள் I**—உடலாக்க நூலும் பொது உடற்கூற்று நூலும், தலோபிர, பிரேயோபிர, ரெறிடோபிர, ஜிம்னஸ்பேம்.

**தாள் II**—ஸ்பேர்மரோபிற்றுவின் இயற்கையுருவ ஆராய்ச்சி.

**குறிப்பு.**—ஒவ்வொரு தாளுக்குரிய விடயம் மாட்டேற்றுக் குறிப்புகளுக்கு அமைந்ததாகும். பாகுபாடு சம்பந்தமாக—சிறப்பாக அங்கியஸ்பேம் குடும்பம் சம்பந்தமாகவும் இலங்கையின் தாவரமும் தாவரவியலும் சிறப்பாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

46. **தாவரவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—

**தாள் I**—தலோபிர பிறையோபிர, ரெறிடோபிர, ஜிம்னஸ்பேம்ஸ், மரநோய்க்கூறு.

**தாள் II**—வகுப்புத் தொகுப்பு முறையியல், இயற்கையுருவ ஆராய்ச்சி ஸ்பேர்மரோபிறறுவின் இயற்கையுருவ ஆராய்ச்சி முதலியன.

**தாள் III**—உடல் நூல்.

**தாள் IV**—பொருளாதாரவியலின் சுருக்கம்.

(**குறிப்பு.**—கீழ்ப்பிரிவின் பாடவிதானத்தைப் பார்க்க).

47. **விலங்கியல் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—இன்வேட்டிபிரூரா, தோற்றல விலங்குகளின் புவியியல் சம்பந்தமான பரம்பல், வேட்டிபிரூரா எம்பிரையோலஜி, சைரொலொஜி, எறிடிரி, எகொலஜி.

48. **விலங்கியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—இன்வேட்டிபிரூரா, வேட்டிபிரூரா, பொருளாதார விலங்கியல்.

49. **அரசாங்க நிருவாகம்.**—அரசாங்க நிருவாகமென்றால் என்ன? நிருவாக முறைமை, நிறைவேற்று ஆட்சி—இலங்கையில் அதன் அதிகாரமும் அதன் அமைப்பும் பணித்துறை ஆட்சி, அரசாங்க சேவை—அமைப்பு முறையும் முகாமையும் சமூக நலனேம்பு அரசியல் அதன் கடமை. நிருவாகத்தின் பாராளுமன்ற நீதிமுறைக் கட்டுப்பாடு ; அரசாங்க முயற்சிகள் மீதுள்ள பாராளுமன்ற அமைச்சர் கட்டுப்பாடு ; அரசாங்க முயற்சிகள் மீதுள்ள பாராளுமன்ற அமைச்சர் கட்டுப்பாடுகள். இலங்கையில் அவற்றின் முகாமைச்சிக்கல்கள். உள்ளூராட்சி என்பதன் கருத்து, இலங்கையில் உள்ளூராட்சியின் விருத்தி. அதன் இப்போதைய அமைப்பு. பற்பல உள்ளூராட்சிச் சபைகளின் பணிகளும் அதிகாரங்களும். அவற்றின் நிதி. உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு.

50. **அரசாங்க நிதி.**—அரசாங்க நிதியென்றால் என்ன? வரிவிதிப்புக் கொள்கை, நேர்வரிகளும், மறைமுகமான வரிகளும்— வரிகளின் தாக்கம், வரிவீதம், விளைவு. அரசாங்க செலவு பற்றிய கொள்கை. அரசாங்கச் செலவின் கட்டுப்பாடு. அரசாங்கக் கடன் பற்றி கொள்கை. அரசாங்க பணக் கொள்கை. நிதி நிருவாகமும் வரவு செலவுத் திட்ட நடைமுறையும். நிதி பற்றிய பாராளுமன்றக் கட்டுப்பாடு. இலங்கையில் மத்திய அரசாங்க நிதியும் உள்ளூராட்சி நிதியும்.

51. **அலுவல் நிருவாகம்—கொள்கையும் சாதனையும்.**—அலுவல் நிருவாகம் கற்க வேண்டிய அவசியமும் அதனை அணுகும் முறையும் இலங்கையை விசேடமாகக் குறிப்பிட்டு, அலுவல் சுற்றாடல், அலுவல் மூலவளங்கள், செயல்முறைகள் ஆகியன. சட்ட இயல்புகள் உட்பட அலுவல், அரசாங்கத் தொடர்புகள். பற்பல வகையான முகாமைப் பிரச்சினைகளைப் பாகுபடுத்தும் வல்லமையும், அலுவல் பிரச்சினைகளையும் செயல் முறையாக அலுவல் பற்றிய தீர்மானங்களையும் தீர்ப்பதற்குப் பொருளாதாரப் பாகுபாட்டைப் பிரயோகிக்கும் வல்லமையும் எதிர்பார்க்கப்படும். பொருளாதார, அலுவல் சஞ்சிகைகளும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஆண்டு அறிக்கைகளும் வாசித்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

52. **முகாமைத் தத்துவங்கள்.**—வரையறை, நோக்கம் அடிப்படை, முகாமைச் சிந்தனை விருத்தி. சமூகப் பொறுப்புக்களும் முகாமையும் முகாமை பற்றிய அமைப்புக் கொள்கை, நிருவாகப் போக்கு, உளவியல். முகாமை பற்றிய தீர்மானஞ் செய்கையில் விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்தல்.

தேர்ந்தெடுக்கப்படும் சில பிரதேசங்களில் முகாமை முறை, உற்பத்தி, நிதி, போக்குவரத்து, ஆளணி நிருவாகம், கைத்தொழில் உறவு.

53. **சந்தைப்படுத்தல்.**—வரையறை நோக்கம், கடமை, பொருளாதார விருத்திக்கு அளிக்கும் முக்கியத்துவம்.

நுகர்வோர் போக்கு.
சந்தைப்படுத்தலைக் கற்கும் வகை.

சந்தைப்படுத்தல் தொழிலும் நிறுவனங்களும் (மொத்தவிற்பனை, சில்லறை விற்பனை) இலங்கையைச் சிறப்பாகக் குறிப்பிட்டு சந்தைப்படுத்தல் கொள்கைகளும் வழங்கல்களும். வணிகத் தொழில் விலைகுறிப்பிடல், விநியோக முறைகள், ஆள் விநியோகம் (Logistics) சந்தை ஆராய்ச்சி விளம்பரம் விற்பனையை மேம்படுத்தலும் பொது உறவும், கூட்டுறவுச் சந்தை, சந்தைப்படுத்தல், மாற்றப்படும் மாதிரிகள்.

54. **கல்வி உளவியல்— தாள் I.**—குழந்தைப்பருவந் தொடக்கம் முதிர்ச்சியடையும் வரை அறிவு விருத்தி. அறிவு விருத்தியைப் பாதிக்கு மளவுக்கு உடல், சமூகம், உணர்வு அபிவிருத்தி, புலனுணர்ச்சி, ஞாபகம், சிந்தனை, பிரச்சினை தீர்த்தல் பற்றிய செய்முறைகள் கற்றல் பற்றிய கொள்கைகள். கற்றதைப் பிறருக்குக் கொடுத்தல், படிப்பில் அறிவுசாராக் காரணிகள். மிகப் புறநடையான பிள்ளைகள்—அறிவு வளர்ச்சியற்றவர் மந்தமாகக் கற்பவர், இயற்கைத் திறனுடையோர். போக்குக்களும், திறன்களும் கற்றல், ஆளுமை விருத்தியும் அறிவுச் சுகாதாரமும். கல்வி சம்பந்தமான வழிகாட்டுகை.

**தாள். II**—அறிவு அளவிடுந்தன்மை. அறிவை அளவிடுகையில் புள்ளிவிவரக் கொள்கைகளும் முறைகளும். கல்வி, உளவியல அளவீட்டின் நோக்கங்கள். சோதனை அமைப்பில் புள்ளிவிவரக் குறியீடுகள். கல்வி உளவியல் சோதனைகள் அமைத்தல், தரப்படுத்தல் பயன்படுத்தல்.

55. **கல்வித் தத்துவங்கள்.**—

1. கல்வி, கல்வி நோக்கங்கள் பற்றிய கொள்கை.
2. கல்வியின் முக்கியத்துவம்—தனியார் கல்வி, சமூகக் கல்வி.
3. பிலேரோ, ருசோ, டியூயி, தாகூர், காந்தி ஆகியோரின் கல்வி பற்றிய மெஞ்ஞானவியல்.
4. கல்வியின் ஒழுக்கஞ்சார்ந்த, சமய காரணிகள்.
5. கல்வி, மனித தொடர்புகள்.
6. பொருளாதாரம், அரசியல், சமூகம் கல்வி. பள்ளிக்கூடத்தை ஒரு தேசிய நிறுவனமாகக் கருதல்.
7. பண்பாடு, சமுதாயம், சமூகத் தொகுதிகள், சமூகமயமாக்கல்.
8. ஒரு பள்ளிக்கூடத்தின் சமூக முறைமை.
9. கல்வியின் பொருளடக்கம், பாடத்திட்டம் பற்றிய கொள்கை—பொது, சிறப்புக்கல்வி, தாராளமான, செயல்முறைக்கல்வி, பாட விதான அமைப்புப் பற்றிய தத்துவங்களும், தீர்மானங்களும் கருவிகளும்.
10. பல்கலைக்கழகங்களினதும் பிற உயர் கல்வி நிறுவனங்களினதும் பணியும் கடமையும்.
11. கற்பிக்குந் தொழிலும் ஆசிரியர் கடமையும்.

56. **ஒப்பியற் கல்வி.**—

(i) ஒப்பியற் கல்விக் கொள்கை, கல்விக் கொள்கையின் அரசியல், சமூக பொருளாதார, பண்பாட்டு உறுதிப்பாடுகளைக் கற்றலும் பல்வேறு நாடுகளிலும் அவை பற்றிய செயல்முறைகளும்.

(ii) அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையும் நாடுகளில் கல்விப் போக்குக்கள்—இவ்வகுதிகட்குப் பிரதிநிதியாகவிருக்கும் ஒரு தொகுதி நாடுகளைப் பற்றிக் கற்று அது பற்றி விளக்கல்.

(iii) இலங்கையின் வரலாறு, பண்பாடு, சமூக—பொருளாதார நோக்குக்களைப் பின்னணியாகக் கொண்டு கற்ற இலங்கையின் கல்வி முறைகள்.

(iv) இலங்கையின் கல்விப் பிரச்சினைகளும் பிறநாடுகளில் அவற்றையொத்த பிரச்சினைகளும்.

57. **ஆட்கள் உடமைச் சட்டம்.**—உரோமன்–டச்சுச் சட்டங்களின் தத்துவம்—அவை இலங்கையில் பிரயோகிக்கப்படும் முறைகளை விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

58. **கடப்பாட்டுச் சட்டம்.**—ஒப்பந்தம், சட்ட மீறுகை மருவிய ஒப்பந்தம் ஆகியவற்றின் உரோமன்–டச்சுச் சட்டத் தத்துவங்களும், பொருத்தமான விடத்து ஆங்கிலச் சட்டங்களும்.

59. **உரோமன் சட்டம்.**—உரோமன் தனிப்பட்ட சட்டமும் அதன் வரலாறும், கையசு, ஜஸ்ரினியன் நிறுவகங்களுடன் தொடர்புபடுத்திப்படித்தல் வேண்டும். மொழி பெயர்ப்புக்கும் குறிப்புரைகளுக்குமாகப் பகுதிகள் தரப்படும். நூல்களை மொழிபெயர்க்கும் அறிவுக்கு மாத்திரம் திறமை காட்டப்படமாட்டாது.

60. **அரசியலமைப்புச் சட்டம்.**—ஆங்கில அரசியல் அமைப்புச் சட்டம், ஐக்கிய இராச்சியத்திற்கும் பிரிட்டிசுப் பொதுநல அரசுகளுக்குமிடையே யுள்ள தொடர்பு. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம்.

61. **சர்வதேச சட்டம்.**—சர்வதேச அமைப்பு உட்பட சர்வதேசச் சமாதானச் சட்டம்.

62. **நிதி வன்மையும் சட்டக் கொள்கையும்.**—பேரரசாட்சிக் கொள்கையுட்பட, சட்டத்தன்மை பற்றிய கொள்கைகள், ஆங்கில, உரோமன் சட்டங்களை விசேடமாகக் குறிப்பிட்டு, சட்டத்தின் மூலமும் விருத்தியும் உரிமைகளினதும் கடமைகளினதும் தன்மையும் அவற்றின் பாகுபாடும். சட்ட வன்மை முறைகள்.

63. **கிறிமினல் சட்டம்.**—கிறிமினல் நடைமுறை உட்படாது. ஆங்கில கிறிமினல் சட்டமும் இலங்கைக் கிறிமினல் சட்டமும்.

**பிரிவு இ**

64. **வாய்மொழிப் பரீட்சை (விசேட).**—(பொது) வாய்மொழிப் பரீட்சையும் இப்பரீட்சை பரீட்சார்த்திகள் கடல்கடந்த சேவைக்குத் தகுதியுடை யரோவென நிச்சயிப்பதற்கு அமைந்துள்ளது. அவர்களின் சொந்தப் பண்பும், பிறநாட்டறிவு, சர்வதேச அலுவல்கள், சர்வதேச சட்டம், பிறநாட்டு மொழிகளின் அறிவு போன்ற பிற விசேட அறிவும் கவனிக்கப்படும்.

7-569—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915.

---

இலக்கம் இ 5/65 (தொகுதி II)

**இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கான யாவர்க்கு முரிய போட்டிப் பரீட்சை**

*1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியின் 14,908 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1970 மே 10 ஆந் திகதிய பரீட்சைப் பிரமாணங்கள் இத்தால் நிராகரிக்கப்படுகின்றன.*

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
கொழும்பு 1, 4 யூலை, 1970.

7-550—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு நீர்கொழும்பில் டுவா என்னுமிடத்தில் ½ தொன் முதல் 1 தொன்வரை நிறையுள்ள 500 பாறுங்கற்களையும் 9" முதல் 12" வரையிலுமுள்ள 100 கியூப் உடைகற்களையும் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப்பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970 ஆகஸ்டு 7 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. பாறுங்கற்களைத் தகர்ப்பதற்கும், ஏற்றிச் செல்வதற்குமெனப் பொறித் தொகுதிகளும் சாதனங்களும் தங்களிடமுண்டு யென்பதற்கான சான்றையும், பாறுங்கற்களை வழங்கும் பெரிய ஒப்பந்தங்களைத் திறமையுடன் தாங்கள் நிறைவேற்றியதற்கான சான்றையும் ஒப்பந்தக்காரர்கள் காட்டுதல் வேண்டும்.

3. 1970 ஆகஸ்டு 7 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

4. கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

5. கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செயவோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

6. மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1970 ஆகஸ்டு 5 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த. சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

7-662—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## *கச்சேரி, வவுனியா*

*கீழ்க்காணும் கட்டிட வேலைகள் சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் தனித் தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*(1) தேவிபுரம் பிரதான வீதியில் காடு வெட்டுதலும், மண் வேலைகளும்.*

*(2) தேவிபுரம் பிரதான வீதியில் கிரவல் போடுதல்.*

*அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்தும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவைகளிடமிருந்தும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் கச்சேரியில் ரூபா 25/- (ஒவ்வோர் வேலைகளுக்கும்) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரைக்கும் இக்கச்சேரியில் வழங்கப்படும்.*

*ஆ. பெருமையினர்,*
*வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.*

*கச்சேரி, வவுனியா,*
*1970, யூலை 5.*

*7-555—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915*

---

## *இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி*

*1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், 1 ஆம் தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குக் கீழ்க் குறிப்பிடப்பட்ட புகையிரத நிலையங்களில் பொதிகள் ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் பதிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்களிடமிருந்து வரும் கேள்விப் பத்திரங்களை, பொது முகாமையாளர் காரியாலயம், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, தபால் பெட்டி இல. 355, கொழும்பு 10 இல் உள்ள கேள்விச்சபை அதிபர், 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்.*

*(1) மாத்தறை*
*(2) காலி*
*(3) பொல்காவலை*
*(4) குருநாகல்*
*(5) மாகோ*
*(6) யாழ்ப்பாணம்*
*(7) றம்புக்கனை*
*(8) கண்டி*
*(9) தலவாக்கலை*
*(10) கற்றன்*
*(11) நாவலப்பிட்டி*
*(12) கம்பளை*
*(13) கப்புத்தளை*
*(14) மாத்தளை*
*(15) நானு ஓயா*
*(16) அப்புத்தளை*
*(17) பண்டாரவளை*
*(18) பதுளை.*

*2. பதிவுசெய்யப்படாத கேள்வியாளர், 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், 3 ஆம் திகதி திங்கட்கிழமையோ அல்லது அதற்கு முன்போ, பின்வரும் விபரங்களுடன் வர்த்தக அதிபர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு மனுச்செய்து பதிவித்துக்கொள்ளவும்.*

*(அ) முந்திய அனுபவங்களுடனான குறிப்புடன், அண்மையில் பெற்றுப்பெற்ற அனுபவம், தகுதி ஆகியவற்றைக் குறிக்கும் இரண்டு நற்சான்றிதழ், 26 ஆம் திகதி மே மாதம் 1961 ஆம் ஆண்டு திறைசேரிச் சுற்றறிக்கை இலக்கம் 1085 டீ/282/2ஆ இல் காணப்படும் கூற்றுக்கமைய அப்பகுதி மாவட்ட வருவாய் அதிகாரியிடமிருந்து நிதி உறுதிப்பாடு பற்றிய விபரத்துடனான கூற்று.*

*(ஆ) அரசாங்கத்துடன் செய்து முடித்த ஒப்பந்தங்களும், அச்சேவைகளின் விபரங்களைக் கொண்டதுமான கூற்று.*

*(இ) காணிச்சொத்துக்களும், வேறுசொத்துக்களும், அவை இருக்கும் மாவட்டம் அல்லது மாவட்டங்கள் ஆன முழு விபரங்களடங்கிய கூற்று.*

*(ஈ) கேள்வியாளரின் பெயர், தவறிய ஒப்பந்தக்காரரின் பட்டியலில் இல்லையென உறுதி உரை.*

*3. கேள்விப்பணமாக, ரூபா 100 புகையிரதப் பிரதம கணக்காளர் அலுவலகத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயாயின் கச்சேரியிலோ கட்டிய பற்றுச்சீட்டு கொடுப்பவர்கட்கு, 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வர்த்தக அத்தியட்சகர், இலங்கைப் புகையிரதப்பகுதி, கொழும்பு 10 அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் இரண்டு பகுதிகள் உள்ளதாய் இருத்தல் வேண்டும்.*

*4. இவ்வறிக்கைப்பிரதியுடனும், விநியோகிக்கப்பட்ட விபர அறிக்கையுடனும் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பொறியிடப்பட்ட உறையின் மேல், கேள்வியாளரின் பெயர், விலாசம் சேவை விபரத்துடன், தலைவர் கேள்விச்சபை,*

பொதுமுகாமையாளர் காரியாலயம், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி த. பெ. இல. 355, கொழும்பு 10 என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலிலோ அல்லது கேள்வியாளர் அல்லது அவர்களின் முகவர் மூலமோ கேள்விச்சபைத் தலைவரால் நியமிக்கப்பெற்ற அதிகாரியிடம் நேரில் கொடுத்து அவ்வதிகாரியிடமிருந்து, பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். முதலாம் பந்தியில் குறிப்பிடப்பெற்ற திகதி நேரத்திற்குப்பின் அனுப்பிவைக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்வியாளர் விரும்பினால், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம். 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இலங்கைப் புகையிரதப்பகுதி, த. பெ. இல. 355, கொழும்பு 10 இல் உள்ள பொதுமுகாமையாளர் காரியாலயத்து கேள்விச்சபை அதிபரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்கள் மூடும் திகதியிலிருந்து ஆறு கிழமைகள் வரை கேள்வியாளர்கள் தங்கள் கேள்விகளை ஏற்பதற்கு ஏதுவாக வைத்திருத்தல் வேண்டும்.

7. மறுவிபரங்கள் வர்த்தக அத்தியட்சகர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, கொழும்பு 10 என்னும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வீ. ரீ. நவரத்ன,
பதில் பொது முகாமையாளர்,
இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதி.

தபால் பெட்டி இல. 355,
கொழும்பு 10,
2.7.1970.

7-634—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## விவசாய காணி அமைச்சு

### பழைய கார் டயர்களும் டியூப்புக்களும் விற்பனை

பின்வரும் பொருட்களின் விற்பனைக்கான கேள்விகள் விவசாய காணி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| விடயம் | | விபரம் | | தொகை |
|---|---|---|---|---|
| 1 | .. | டயர் மிச்சலின் | .. | 38 165/15 |
| 2 | .. | டியூப்புக்கள் மிச்சலின் | .. | 22 165/15 |

2. இப்பொருட்களை இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ல் உள்ள அமைச்சு அலுவலகத்தில் 19.7.70 தொடக்கம் 30.7.70 வரைக்கும் வழமையான அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

3. எழுதப்பட்ட கேள்விகள் பொறியிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "பழைய புதினத்தாள் முதலியவை கொள்வனவு செய்வதற்கான கேள்விகள்" என உறையில் குறிப்பிட்டு தலைவர், கேள்விச் சபை, விவசாய காணி அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது விவசாய காணி அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 31.7.70 முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படும். கேள்வியாளர்கள் விரும்பியவிடத்து திறக்கப்படும் நேரத்தில் சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவருடைய கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுள் கேள்வித் தொகை முழுவதையும் செலுத்துவதுடன் அப்படிப் பணம் செலுத்தப்பட்ட 2 நாட்களுள் பொருட்களை அகற்ற வேண்டுமெனவும் வேண்டப்படுவர்.

ඕ. ඕ. ඊ. ඇස්. සිරිමාන්න,
நிரந்தரச் செயலாளருக்காக.

விவசாய காணி அமைச்சு,
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

7—498—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## மோட்டர் வாகனத்தின் விற்பனை

கீழ்காணப்படும் வாகனத்தை வாங்குவதற்காக 1970 ம் ஆண்டு ஜூலை மதம் 31 ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

டொட்ஜ் லொறி இல. [illegible]-1045

எடை [illegible]0 அந்தர் 3 துலாம் 7 இரு

[illegible] எடை : 7689 இரு

இலங்கை வங்கியின் மஹறகம கிளையான 88 ஹைலெவல் வீதி, மஹறகம என்னும் முகவரியில், 1970 ம் ஆண்டு ஜூலை மதம் 30 ம் திகதி வரை, வழக்கமான வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இவ் வாகனத்தை பார்வையிடலாம்.

திருப்பிப்பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணமாக 100 ரூபாவை, இலங்கை வங்கி, கணக்குப் பகுதி, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு 1 ல் வைப்பிட்டு அதன் பற்றுச் சீட்டை கேள்விப் பத்திரத்துடன் இணைசெய்ய வேண்டும்.

மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் முகாமையாளர், இலங்கை வங்கி தரவுத்துறை, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு 1 ல் பெற்றுக்கொள்ளலம்.

4.7.1970.

7—607—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## கச்சேரி, வவுனியா

கீழ்க்காணும் கட்டிட வேலைகள் சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் தனித்தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) வவுனியா கச்சேரியிலுள்ள புது (கன்ரீன்) கட்டிடத்துக்கான கூரை வேலையும் பிறவும்.

(2) முல்லைத்தீவு, மாங்குளம் வாடிவீடுகளில் சிறுதிருத்த வேலைகள்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்கள் (இருபிரதிகளும்) நிரப்பி அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க அலுவலகங்களிடம் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களிடமிருந்தும், கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவைகளிடமிருந்தும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் கச்சேரியில் ரூபா 25 (ஒவ்வோர் வேலைக்கும்) கட்டிப்பெற்ற பற்றுச் சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். கேள்விப் பத்திரங்கள் 22.7.70 தொடக்கம் 29.7.70 வரைக்கும் இக்கச்சேரியில் வழங்கப்படும்.

என். டி. ஜயவீர,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
வவுனியா.
7.7.1970.

7-674—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## சுகாதார திணைக்களம்—தேசிய பால்திட்டம்

### வவுனியா பகுதி—பசும் பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1970 ம் வருடம் ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து வவுனியாப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சர் ஏற்றுக்கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருனாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களில் கேள்விகள் முடியும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கவேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், வவுனியா என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை யிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உடைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்பட்டியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம்வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச் சூழ்நிலையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் வவுனியாப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதாரசேவை அத்தியட்சகர், வவுனியா.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
வவுனியா, 9.7.70.

### மேற் கூறப்பட்ட அட்டவணை

| சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| 1. மாங்குளம் புகையிரத நிலையத்திலிருந்து முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. .. .. | முல்லைத்தீவு .. | 6,975 .. | 5.8.70 |
| 2. மன்னார் புகையிரத நிலையத்திலிருந்து மன்னார் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து மன்னார் சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. .. .. | மன்னார் .. | 11,335 .. | 5.8.70 |
| 3. வவுனியா அரசினர் பண்ணையிலிருந்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. .. .. | வவுனியா .. | 360 .. | 5.8.80 |

7–675—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915.

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும் பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1970 ம் ஆண்டு ஒக்ரோபர் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் செல்லப்பட்டிருக்கும் வண்ணம் சுகாதார அலுவலகங்களிலிருந்து ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து புத்தளப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது என் பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம், என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக் காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய விபரங்களை புத்தளப்பகுதி சுகாதார சேவை அத்தியட்சகர்க்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எச். பீறிஸ்,
சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,,
புத்தளம்,
1970 ம் ஆண்டு யூலை மீ 6 ந் உ.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

| சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| 1. மாறவில்ல, தங்கொட்டுவ சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு .. .. | மாறவில்ல, தங்கொட்டுவ .. | 9,750 .. | 11.8.70 காலை 10 மணி |
| 2. சிலாபம் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பாலூட்டும் நிலையங்கட்கு .. .. .. | சிலாபம் .. | 9,250 .. | 11.8.70 காலை 10 மணி |

7–530—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915.

---

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

தனித்தனிக் கேள்விப் பத்திரங்கள் பின்வருவனவற்றுக்குக் கோரப்படுகின்றன :—

(i) சீராக்கிகளோடு 36" வீச்சின் 117 இலக்கங்களுள்ள சீலிம் விசிறிகளை வழங்கல்.

(ii) சீராக்கிகளோடு 58" வீச்சின் 90 இலக்கங்களுள்ள சீலிங் விசிறிகளை வழங்கல்.

(iii) பம்பலப்பிட்டி அடுக்கு மாடி வீடமைப்புத் திட்டத்தில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 207 இலக்கங்கள் கொண்ட சீலிம் விசிறிகளை அமைத்தல்.

1970 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் தேதியில் நண்பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் தேதியில் காலை 10 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை இத்திணைக்களத்து அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
கொழும்பு-2.

7–686—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## அஞ்சல் தந்திப்போக்குவரத்துத் திணைக்களம்

### நாகம்பூசப்பட்ட அச்சாணிகளினதும் சுரைகளினதும் (கல்வனேட் போல்டுகளினதும் நட்களினதும்) வழங்கீடு (சப்ளை)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள, சதுரவடிவமான தலைகளுடன் பொருந்திய, நாகம் பூசப்பட்ட அச்சாணிகளையும் சுரைகளையும் ஏனைய மேல்கம்பி வரிசை பொருள்களையும், வழங்கீடு செய்து, ஒப்படைப்பதற்கான கூறுவிலைகள், கொழும்பு 1 லோட்டஸ் வீதியிலுள்ள, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமைக் காரியாலயத்து 5–ம் மாடியிலுள்ள, பொறியியல் பிரிவின் கேள்விச் சபைத் தலைவரால், இத்தால் கோரப்படுகின்றன.

| | அம்சங்கள் | தேவையான பிரமாணம் | பிரிட்டிஷ் தரம் பற்றிய விபரங்கள். (பி. எஸ். விபரங்கள்). |
|---|---|---|---|
| 1. | எல். 106, 4″ × 3/8″ அச்சாணிகள், சுரையுடனும் 2 வாஷர்களுடன் கூடியது | 10,000 | 1–வது படிவம் |
| 2. | எல் 117, $6\frac{1}{2}$″ × $\frac{1}{2}$″ அச்சாணிகள், சுரையுடனும் 2 வாஷர்களுடன் கூடியது | 5,000 | 2–வது படிவம் |
| 3. | எல் 119, $7\frac{1}{2}$″ × $\frac{1}{2}$″ அச்சாணிகள், சுரையுடனும் 2 வாஷசர்களுடன் கூடியது | 5,000 | 2–வது படிவம் |
| 4. | எல் 121, $8\frac{1}{2}$″ × $\frac{1}{2}$″ அச்சாணிகள், சுரையுடனும் 2 வாஷர்களுடன் கூடியது | 5,000 | 2–வது படிவம் |
| 5. | எல் 104, பக்ஸ் ஜி. ஐ. 26 × $1\frac{1}{2}$″ × $\frac{1}{2}$″ | 4,000 | திணைக்கள வரைவு எல் 580 |
| 6. | எல் 4 ஸ்பின்டல்கள் 5/8″ சிறியவை | 11,000 | பிரிட்டிஷ் தர ஸ்பின்டல்கள் 24 ம் படிவம், 31–ம் படிவம் 2–வது இலக்கம் |
| 7. | எல் 8 ஸ்பிண்டல்கள் 5/8″ ஜே. சிங்கிள் | 5,000 | பிரிட்டிஷ் தரம் 16–ம் இலக்கம் |
| 8. | எல் 10 ஸ்பிண்டல்கள் 5/8″ ஜே. டபிள் | 4,000 | பிரிட்டிஷ் தரம் 14–ம் இலக்கம் 2[9] ம் படிவம் |
| 9. | எல் 13 ஸ்பிண்டல்கள் 5/8″ ஆங்கில “ யு ” எழுத்து வடிவமானது | 1,000 | 21–ம் இலக்கம் 32–வது படிவம் |
| 10. | எஸ் 5 எர்த் பிளேட்டு 12″ × 12″ × 1/8″ (3/20 கியூபிக் பிரமாண 2 அடி கம்பியால் சூட்டுக்கோல் ஊட்டப்பட்டது. பிளேட்டின் தடிப்பம் 1/8″ எஸ். டபிள்யூ. ஜி. 10. ஆயிருக்க வேண்டும்) | 3,000 | |
| 11. | எல் 2 டி. சி. பிரெக்கட்டுகள் | 1,000 | பிரிட்டிஷ் தர பிரெட்டு 2 ம் இல. 10–5து படிவம் |

2. மேல் கம்பிவரிசை பொருள்களுக்கான 1949 ம் ஆண்டு 16–ம் இலக்க பிரிட்டிஷ் தரத்து விவரக்கூற்றுக்களுக்கு அமைவாக, மேற்படி அம்சங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

3. அச்சாணிகள், சுரைகள், அலகுப்பொறிகளின் (வாஷர்களின்) வழங்கீடு சார்பான கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பவர்கள், அவற்றின் கூறுவிலைகளுடன் மாதிரிப் படிவங்களையும் அனுப்பவேண்டும். திணைக்களத்தால் உபயோகப்படுத்தப்படும் அச்சாணிகளினதும் சுரைகளினதும் மாதிரிப் படிவங்களை, மருதானையிலுள்ள அஞ்சல் தந்திப்போக்குவரத்து களஞ்சியசாலையில், பார்வையிடலாம்.

4. கூறுவிலைகள் அனுப்பப்படும்போது, ஒவ்வொரு வகையிலும், ஒவ்வொரு ஆயிரத்துக்கான (1,000) வீதங்கள் கொடுக்கப்படவேண்டும்.

5. “ அச்சாணிகளினதும் சுரைகளினதும் வழங்கீடு சார்பான கூறுவிலைகள் ” என்று மேல் இடது பக்க மூலையில், அடையாளமிடப்பட்ட உறையினுள், கூறுவிலைகள் அடக்கப்பட்டு, அதனை பொறியிட்டு, பதிவு தபால் மூலம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர், 5–வது மாடி அஞ்சல் தந்திப்போக்குவரத்துத் தலைமைக் காரியாலயம், லோட்டஸ் வீதி, கோட்டை, கொழும்பு 1, என்ற முகவரிக்கு 1970, ஆகஸ்ட் 5 ம் திகதி காலை 10 மணிக்கு முன் பிரதான தந்திப்போக்குவரத்துப் பொறியியலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கவேண்டும். அல்லது மேற்படி உறைகளை மேற்படி அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திர பெட்டியிலே அதே காலவரையினுள் இடவேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் மூடப்பட்ட அதே நாளில் (5.8.1970) காலை 10.30 மணிக்கு கூறுவிலைகள் அடங்கிய உறைகள் திறக்கப்படும். உறைகள் திறக்கப்படும்போது, பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்திலே, விண்ணப்பகாரர் சமூகந்தரலாம்.

7. கூறுவிலைகள் எவ்வளவு காலம்வரை செல்லுபடியானதாயிருக்கும் என்பதையும் ஒவ்வொரு அம்சமும் எப்போது ஒப்படைக்கப்படும் என்பதையும் கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடவேண்டும்.

8. இதற்கு மேற்பட்ட தகவல்களை, பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களின்போது, அதாவது காலை 9 மணி முதல் மாலை 4.00 மணி வரை, பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்படி பிரமாணங்களை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் உரிமை கேள்விச்சபைத் தலைவருக்குரியது.

வீ. அழகரத்தினம்,
பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர்.

பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகம்,
5–வது மாடி,
அஞ்சல் தந்திப் போக்குதரத்தித் தலைமைக் காரியாலயம்,
லோட்டஸ் வீதி, கோட்டை,
அ. பெ. இல. 503,
கொழும்பு–1.

7–596—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

*சிறைச்சாலைப் பகுதி*

*ஏல விற்பனை*

*கீழே காணப்படும் விபரமுள்ள மிருகங்கள் 7.8.1970 வத்துப்பிட்டி வலை பாலிய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலையில் ஏலத்தில் விற்கப்படும்.*

*(1) 2 பசுமாடுகள்*

*(2) 8 மாட்டுக் கன்றுகள்*

*(3) 1 பெண் பன்றி*

*மிருகங்களை கிழமை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை பார்வையிட அனுமதிக்கப்படுவர்.*

*ஆகக்கூடிய விலை கேட்பவர் ஸ்தலத்திலேயே பணம் கட்டி உடனடியாக மிருகங்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.*

*ஈ. சி. பிரேமதிலக,*
*அதிகாரி,*
*பாலிய குற்றவாளிகள் பயிற்சிப்பாடசாலை,*
*வத்துப்பிட்டிவலை.*

*7-531—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915*

## காட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

மட்டக்களப்பு வெல்லாவெளி வட்டாரத்தில் பல இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங்களைக் கொண்ட மரங்களும், காரத்தைகளும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 27.7.70 காலை 10 மணிக்கு வெல்லாவெளி பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வை இடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது மேற்கூறிய வெல்லாவெளிப் பகுதி வட்டார வன அதிகாரி காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

ச. முத்தையா,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி, மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஸ்ரீ ஜூன் மீ 30 ந உ.

7—483/1—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## சாமான்கள் பகிரங்க ஏலவிற்பனை

இக் கோட்டில் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் தேதி 1.30 மணிக்கு இதன் கீழ்க் குறிப்பிடப்படும் சாமான்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

(1) ஹம்பர் சயிக்கள் நொம்பர் CD 9183.
(2) ரெலி சயிக்கள் நொம்பர் GG 84921.
(3) B. S. A. சயிக்கள் நொம்பர் KB 12675.
(4) ரட்ஜ் சயிக்கள் நொம்பர் FF 26445 (பழுதானது)
(5) சயிக்கள் நொம்பர் HC 4835.
(6) சயிக்கள் நொம்பர் DT 3351.
(7) ரட்ஜ் சயிக்கள் நொம்பர் BT 70987.
(8) ரட்ஜ் சயிக்கள் நொம்பர் BJ 67490.

இச்சாமான்களுடன் சில பழைய கைக்கடிகாரங்களும், கத்திகள், கோடாலி, அறுவாக்கத்தி போன்ற சாமான்களும் ஏலத்தில் விற்கப்படும்.

யாராகிலும் ஒருவர் இவ்விளம்பரம் செய்யப்படும் சாமான்களை தங்களுடையதென்று அவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், இந்த ஏலத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பதாக தன் உரிமையை இக்கோட்டாருக்கு நிரூபிக்க வேண்டும்.

இந்த ஏலத்தில் சாமான்கள் வாங்குகிறவர்கள் அதன் முழுத் தொகையையும் கட்டி ஏலம் இடும் அன்றே சாமான்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இச்சாமான்களுக்கு ரொக்கப் பணமாகவே கட்ட வேண்டும்.

எப். ஜி. பி. பர்ணண்டோ,
நீதிபதி கண்டி.

மாஜிஸ்ட்ரேட் கோட்,
கண்டி,
29.6.1970.

7-499—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## மா. ம. சுங்க இலாகா

### பழுதடைந்த பொருள்கள் விற்பனை

மேசை, கதிரை, கட்டில், நிறுத்தல் யந்திரம், ரயர், குளிரூட்டும் பெட்டி முதலிய பழுதடைந்த பொருட்கள் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆம் திகதி மு. ப. 10 மணி தொடக்கம் கொழும்பு கோட்டை கொமிசரியாட் வீதியிலுள்ள எழுதுகருவி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். அன்றைய தினம் விற்பனைகள் முடிவுறாவிடின் அடுத்த நாளும் விற்பனைகள் தொடரும். பொருட்களை 18.8.70 ம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

பொருட்களை வாங்குவோர் பணத்தை காசாகக் கட்டிக் கொள்வதோடு விற்பனை முடிவுற்றதும் பொருட்களையும் உடனடியாக அகற்ற வேண்டும்.

வீ. சின்னத்துரை,
பிரதான சுங்க சேகரிப்பாளருக்காக.

இல. எஸ்ஓ/392,
மா. ம. சுங்க இலாகா,
கொழும்பு,
1970 ம் ஸ்ரீ ஜூன் மீ 23 ந உ.

7–456—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## பழைய துப்பாக்கி ஏல விற்பனை

யாழ்ப்பாணக் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முற்பகல் 9.30 மணியளவில் பழைய துப்பாக்கிகளும், குடைத்துப்பாக்கிகளும் ஏலத்தில் விற்பனையாகும்.

அனுமதிப்பத்திரமுள்ளவர்களும் உத்தரவு பெற்ற துப்பாக்கி விற்பனையாளர்களும் மாத்திரம் விலை கேட்க அனுமதிக்கப்படுவார்கள்.

கச்சேரி,
யாழ்ப்பாணம், 1970,யூலை 2.

எவ். ஓ. பீற்றேர்ஸ்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.

7-556—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

மீண்ட கடித அலுவலகத்திலுள்ள உரிமை கோரப்படாத தபால் உறைகளில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் 27.7.1970 ம் திகதி திங்கட் கிழமை பி. ப. 1.30 மணிக்கு கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி 19 ம் ஒழுங்கையில் 20 ம் இலக்கத்திலுள்ள மீண்ட கடித அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

நியாயமான ஏலவிலை கிடைக்காவிட்டால் எந்தப் பொருளும் விற்பனையி லிருந்து நிறுத்தி வைக்கப்படும்.

எம். பி. டி. சில்வா,
அஞ்சல் அதிபர் நாயகரும்,
தந்திப்போக்குவரத்து அதிபருக்குமாக.

அஞ்சல் பிரிவு,
அ. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 8 ந் உ.

| விடயம் இல. | பொருட்களின் விபரங்கள் |
|---|---|
| 1. | 1 அந்தர் பழைய புதினத்தாள்கள். |
| 2. | ஷை |
| 3. | 40 றுத்தல் கொண்ட 25 பைகள் உபயோகத்தில் இல்லாத புதினத் தாள்கள். |
| 4. | 40 றுத்தல் கொண்ட 25 பைகள் உபயோகத்தில் இல்லாத புதினத் தாள்கள். |
| 5. | ஒரு கட்டு 100 ஆங்கிலச் சஞ்சிகைகள். |
| 6. | ஷை |
| 7. | ஷை |
| 8. | ஷை |
| 9. | ஷை |
| 10. | ஷை |
| 11. | ஷை |
| 12. | ஷை |
| 13. | ஷை |
| 14. | ஷை |
| 15. | ஷை |
| 16. | ஷை |
| 17. | ஷை |
| 18. | ஷை |
| 19. | ஷை |
| 20. | ஷை |
| 21. | ஷை |
| 22. | ஷை |
| 23. | ஷை |

| விடயம் இல. | பொருட்களின் விபரங்கள் |
|---|---|
| 24. | ஒரு கட்டு 100 ஆங்கிலச் சஞ்சிகைகள் |
| 25. | ஒரு கட்டு 100 வைத்திய நாட்குறிப்பேடுகளும் சஞ்சிகைகளும். |
| 26. | ஷை |
| 27. | ஷை |
| 28. | ஷை |
| 29. | ஒரு கட்டு 100 சமய சஞ்சிகைகள். |
| 30. | ஷை |
| 31. | ஷை |
| 32. | ஷை |
| 33. | ஒரு கட்டு தமிழ் சஞ்சிகைகள் |
| 34. | ஒரு கட்டு சஞ்சிகைகள் (பிறநாட்டுப்பாஷைகள்). |
| 35. | ஒரு கட்டு ஆங்கிலப் புத்தகங்கள். |
| 36. | ஒரு தொகை " றீடேஸ் டைஜெஸ்ற்" (வந்த பிரதிகள்). |
| 37. | ஒரு தொகை வைத்தியப் புத்தகங்கள் " வதேமீக்கம் ரேுச " 1970 |
| 38. | ஷை |
| 39. | ஒரு தொகை ஆங்கிலப் புத்தகங்கள் " கிம் இல்சங் பையோகிறபி " |
| 40. | 3 பிறநாட்டு ஏற்றுமதி விபரக்கொத்துக்கள். |
| 41. | ஒரு தொகை சமயப் படங்கள். |
| 42. | ஒரு பிரெஞ்சுப் புத்தகம் " றீப்பேட்டையின் டெஸ்றெயிட்ஸ் எற் ஒபிளிக்கேசன்-டெஸ் பிருன்காயிஸ் றெசிடென்ற் கோஸ்டீ பிரான்சு" |
| 43. | ஐந்து ரைம் லேவ் புத்தகங்கள். 1. யப்பான். 2. த போல்கன்ஸ். 3. மனிதனும் விண்ணும் 4. த பேத் ஒவ் ஈரேுப். 5. கொலம்பியா அன்ட் வெனுசுவேலா. |
| 44. | ஒரு பொறியியல் புத்தகம் " சால் ருன்சாக்சன்ஸ் 1968 " |
| 45. | ஒரு சியால் பேனா, ஒரு பெண் குடை, ஒரு பையன்கள் அணியும் சேட், ஒரு மூக்குக் கண்ணாடியும் கூடும் (பாவனை செய்தது). |
| 46. | 5 பக்கெட்டுகள் சியலிப்பாதயிலம், 1 போத்தல் முகச்சவர லொஷன். 1 சவுக்காரம். |
| 47. | 3 தலை அணையுறைகள், 3 கைக்குட்டைகள், 1 பொக்சிங் பெனியன், 1 லேடீஸ் வெஸ்ற், 1 சிறிய சட்டை, 1 சட்டைத்துணி. |
| 48. | 1 கிறிஸ்மஸ் லாம்புச் செற், பிளக்குடனும் பிங்பொங் போலுடனும். |
| 49. | 1 சியால் பேனா, 1 திறப்பு வளையம், 1 கண்ணாடிக்கூடு, 1 திறப்பு, 2 கொடாக் பிலிம் றேுல், 1 யேல் திறப்பு, 1 பழுதடைந்த ஊற்றுப் பேனா. |
| 50. | 1 வூர் ரோணி வான் (ரோய்) 1 ரோல் போற. |
| 51. | 26 யப்பானியக் கோப்பைகளும் 34 பீலீசுகளும். |
| 52. | 1 பாவனை செய்த கம்பிலிக் கோட், 1 கட்டைக் கால்சட்டை. |
| 53. | 3 அட்ஜஸ்ரபிள் லோன் ஸ்பிறிங்லேஸ். |
| 54. | 20,000 பாவனை செய்த தபால் முத்திரைகள். |
| 55. | ஷை |

7–657—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### யாழ்ப்பாண மாவட்ட சாராயக் குத்தகை விற்பனை—1970/71

கீழ்க்காணும் சாராயத்தவறணையிலே 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி கால எல்லை வரை சாராயம் சில்லறை விற்பனை செய்வதற்குள்ள சிறப்புரிமை வழங்கும் கேள்விகள் கீழே குறிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய ஏற்கப்படும்.

(1) 1970 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 ம் திகதிய 14,902 இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சாராயக் குத்தகை விசேட விதிகள்.

(2) நடைமுறையிலிருந்து வரும் சகல கலால் உத்தரவுச் சீட்டுக்களின் பொது விதிகள்.

2. இல. 1 பெரியகடை, இல. 2 கரையூர், இல. 3 வல்வெட்டித்துறை, இல. 4 ஊர்காவற்றுறை, இல. 5 வண்ணன்கேணி ஆகிய ஒவ்வொரு தவறணைக்கும் ரூபா 5,000 கட்டுப்பணமாகக் கட்டிய திறைசேரி அல்லது எந்தவொரு கச்சேரிப் பற்றுச்சீட்டைக் காட்டிப் பெற்ற கேள்வி விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். பற்றுச் சீட்டும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும், பொறிக்கப்பட்ட காகித உறைக்குள் வைக்கப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் கீழே குறிக்கப்பட்டதுபோல விளக்கமாக எழுதுதல் வேண்டும். " கேள்விப்பத்திரம்—சாராயத்தவறணை, இல. 1—பெரியகடை/இல. 2—கரையூர்/இல. 3—வல்வெட்டித்துறை/இல. 4—ஊர்காவற்றுறை/இல. 5—வண்ணன்கேணி/யாழ்ப்பாண மாவட்டம்—1970/71.

மேற்கூறிய ஐந்து சாராயத்தவறணைகள் பெயரினும் தனித்தனியான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீழே குறிப்பிட்ட நேரங்களுக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக கச்சேரியில் வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும், அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு தவறணையின் பெயருக்கெதிரே குறிக்கப்பட்ட நேரத்திற்கு கேள்வி விற்பனவு முடிவடையும்.

(அ) சாராயத் தவறணை இல. 1—பெரியகடை மு. ப. 9.30 மணி
(ஆ) சாராயத் தவறணை இல. 2—கரையூர் மு. ப. 10.00 மணி
(இ) சாராயத் தவறணை இல. 3—வல்வெட்டித்துறை மு. ப. 10.30 மணி
(ஈ) சாராயத் தவறணை இல. 4—ஊர்காவற்றுறை மு. ப. 11.00 மணி
(உ) சாராயத் தவறணை இல. 5—வண்ணன் கேணி மு. ப. 11.30 மணி

கேள்வியாளர்கள் யாவரும் 1970 ம் ஆண்டு ஜுலை மாதம் 26 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இக்கச்சேரியில் சமுகமளிக்க வேண்டும்.

4. (அ) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் கேள்விப்பத்திரத்துடன் தமது அசைவற்ற ஆதனங்கள் இருக்கும் பிரிவுக்காரியாதிகாரியிடமிருந்து பெறுமதிப்பத்திரம் பெற்று இணைக்க வேண்டும். அத்தகைய பெறுமதிப்பத்திரத்தின் பெறுமதி, கேள்விக்குத்தகைத் தொகையில் 25% விகிதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். இம்மாவட்டத்தில் அல்லது வேறு பல மாவட்டத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைகளுக்குக் கேள்விப்பத்திரத்துடன் குறித்த ஆண்டுக்குரிய பெறுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதியை இணைத்திருந்தால், அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப் பத்திரத்தின் பிரதி ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதியிலும் மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணை இருக்கும் மாவட்டத்தையும் தவறணையின் பெயர் இலக்கம் ஆகிய விபரங்கள் அடங்கிய குறிப்பு இருக்கவேண்டும்.

(ஆ) தெரிவு பெற்ற கேள்வி ஆளரால் கொடுக்கப்பட்ட பெறுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஆதனத்தை அல்லது ஆதனங்களை அல்லது அவைகளின் உரிமையை எழுத்து மூலம் என் முன் அனுமதி பெறுமல் விற்பதோ, ஈடு வைப்பதோ ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரண்பட்ட செய்கையாகும்.

(இ) கூட்டாகச் சேர்ந்து விண்ணப்பிக்கும் பொழுது யாராவது ஒருவரால் அல்லது பலரால் கொடுக்கப்படும் ஆதனம் பெறுமதிப்பத்திரத்தின் கூட்டுத்தொகை கேள்வி நிபந்தனைக்கு அமையுமானுல் போதுமானதாகும்.

5. யார் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளரென்பதை அறிவித்ததும் அவர் ஒப்பந்த விதிகள் அடங்கிய பத்திரத்தில் கைச்சாத்திட்டு அரசாங்க அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையைப் பிணைப்பணமாகக் கட்டல் வேண்டும்.

6. நியமனம் பெற்ற எந்தவொரு கேள்வியாளராவது மேற்கூறிய சாராயத் தவறணை சாராயம் விற்பதற்கு கேட்டுக்கொண்டபடி ஒப்பந்த விற்பனை நிபந்தனைகள் அடங்கிய பத்திரத்தில் கைச்சாத்திட மறுத்தால் அல்லது நிர்ணயித்த பணத்தைக் கட்டத் தவறினுல் சாராயம் சில்லறையாக விற்பதற்கு வழங்கப்பட்ட சிறப்புரிமை முற்றுகச் செல்லுபடியாகாது. அவர் முதலில் செலுத்திய கேள்விப்பணத்தை இழக்க வேண்டியதுடன் அவரது பெயர் தவறுனர்களால் உத்தரவுச் சீட்டு நிரலிலும் சேர்க்கப்பட்டுவிடும். இவற்றைத் தவிர்த்து மற்றெல்லாக் கேள்வியாளர்களின் கட்டுப்பணம் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திடப் பிணைப்பணம் கட்டியபின் திருப்பிக்கொடுக்கப்படும்.

7. ஒரு பிரதிநிதிமூலமாக விண்ணப்பித்தால் அல்லது இலங்கையர் அல்லாதவர் விண்ணப்பித்தாலும் அல்லது மேற்கூறிய சாராயக் குத்தகை விற்பனவு, 5 ம, 6 ம விதிகளின்படி நிராகரிக்கப்பட்டவராய் இருந்தால் அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. எந்தவொரு கேள்வியையும் அல்லது எல்லாவற்றையுமே காரணம் எதும் காட்டாமல் நிராகரிக்க அரசாங்க அதிபருக்கு உரிமை உண்டு.

9. 1970/71 ம் வருடக் குத்தகைக்கு, தற்பொழுது தவறணை இருக்கும் இடங்கள் கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை, தவறணைக்காகத் தெரிவு செயயப்படும் இடம யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

11. அனுமதிபெற்ற தவறணைகளின் நிரல் பின்வருமாறு :—

| தவறணை இல. | பகுதி | தவறணை தெரிவு செய்யப்படும் பிரதேசம் | தி. நே. காலை | | மூ. நே. மாலை |
|---|---|---|---|---|---|
| 1. | பெரியகடை, யாழ்ப்பாணம் மாநகரசபையின் 14 ம் வட்டாரம் | யாழ்பபாணம் மாநகரசபையின் புகையிரதநிலையம் 14 ம் வட்டாரம் | 8.00 | .. | 8.00 |
| 2. | கரையூர்—யாழ்ப்பாணம் மாநகரசபையின் 3 ம் வட்டாரம் | யாழ்ப்பாணம் மாநகரசபையின் 3 ம் வட்டாரமாகிய கதீடரல் | 8.00 | .. | 8.00 |
| 3. | வல்வெட்டித்துறை—வல்வெட்டித்துறைப் பட்டினசபையின 3 ம வட்டாரம் | வல்வெட்டித்துறைப் பட்டின சபையின் 3 ம் வட்டாரத்தில் | 8.00 | .. | 7.00 |
| 4. | ஊர்காவற்றுறை .. .. | ஊர்காவற்றுறைப்பட்டின சபையின் எல்லைக்குள் .. | 8.00 | .. | 8.00 |
| 5. | வண்ணுன்கேணி, பச்சிலைப்பள்ளி .. .. | வண்ணுன்கேணிக் கிராமத்தில் .. .. | 8.00 | .. | 6.30 |

கச்சேரி, யாழ்ப்பாணம்,
4.7.70.

யோ. மு. சபாரத்தினம்,
பதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.

7–478—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## சாராயத் தவறணை குத்தகை விற்பனை

### மன்ஞர் மாவட்டம் 1970/71

மேற்சொல்லப்பட்ட தவறணையில் சாராயம் விற்கும் சிறப்புரிமை 1.10.70 தொடக்கம் 30.9.71 வரை பெறுவதற்காய கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இச்சிறப்புரிமை கீழ்க்குறிக்கப்படும் விதிகளுக்கமைய விற்கப்படும் :—

(அ) 17.4.70 ந் திகதி பிரசுரமான அரசாங்க வர்த்தமானியில் குறிக்கப்பட்டிருக்கும் சாராயத் தவறணை விற்பனை விதிகள்.

(ஆ) தற்போது நடைமுறையில் இருக்கும் எல்லாக் கலால் உத்தரவுப் பத்திரங்களுக்கும் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகள்.

2. ஒவ்வொரு கேள்வியும் குறிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தில், எழுதப்பட்டு, வைப்புப் பணம் ரூபா 3,000 கட்டிப் பற்றுச்சீட்டுடனும் இருத்தல் வேண்டும், வைப்புப் பணத்தை எந்தக் கச்சேரியிலாவது செலுத்தலாம்.

3. எந்தப் பகுதியில் காணி இருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்கவேண்டும்.

4. பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 சத வீதத்துக்குக் குறையாமல இருக்க வேண்டும்.

5. கேளவிப்பத்திரம ஒவ்வொன்றும் கவரிலிட்டு, கவரின் இடதுபுற மேல் பக்கத்தில் "சாராயத்தவறணை விற்பனை, மன்ஞர்—1970/71" என எழுதப்பட்டு மனஞர் மாவட்ட அரசாங்க அதிபருக்கு 2.7.70 காலை 10.00 மணிக்கு முன்னதாக வந்துசேரவேண்டும். கேள்விப்பத்திரம் பெறுங் காலம் 2.7.70 காலை 10.00 மணிக்கு முடிவடையும். கேள்விக்காரர்கள் அனைவரும் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கச்சேரியில் இருத்தல் வேண்டும்.

6. சித்திபெற்ற கேள்விக்காரர், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டதும் விற்பனை விதிகளில் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் நிர்ணயிக்கப்படும் தொகையை பிணைப்பணமாகக கட்டவும் வேண்டும்.

7. சித்திபெற்ற கேள்விக்காரர், விற்பனை விதிகளில் கைச்சாத்திடவும், பிணைப்பணம் கட்டவும் தவறினுல், அவரால் கட்டப்பட்ட வைப்புப் பணம் பறிமுதல செயயபபடுவதோடு கலால உத்தரவுபபத்திரம் ஏதேனும் பெறுவதற்குத் தகுதியற்றவராக அவரது பெயர் குறைப் பட்டோர் பட்டியலில சேர்க்கபபடும. மேறசொலலப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைய கேள்விக்காரர்களது வைபபுப்பணம் விற்பனை விதிகளில் சித்திபெற்றவர் கைச்சாததிட்டிப பிணைபபணம் கடடியபினனர் திருபபிக்கொடுககப்படும.

8. ஏதாவதொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ நிராகரிக்க மன்ஞர் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மாத்திரமே உரிமையுணடு.

9. சிறப்புரிமை வழங்கப்பட்டவர், வவுனியாவில் உள்ள அரசாங்கக் குதத்தில் மட்டுமே சாராயம் வாங்கலாம்.

10. அங்கீகாரம் பெற்ற சாராயத் தவறணையின் விபரம் பின்வருமாறு.—

| தொடர் இல. | பகுதி | தவறணை இருக்க வேண்டிய இடம். | திறக்கும் நேரம் | மூடும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | .. மன்னார் பட்டினம் .. | .. மன்னனார் பட்டினசபை | .. காலை 8.00 | .. இரவு 8.00 |

11. தற்போது தவறணையிருக்கும் இடம் அங்கீகரிக்கப்படுவது நிச்சயமில்லை. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் மன்னார் பட்டினசபை எல்லைக்குள் எந்த இடத்தை தவறணைக்காகத் தெரிவுசெய்திருரென்பதை மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மன்னார் கச்சேரி,
1970 ஆம் ஆண்டு ஆடி மீ 5 உ.

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

7–590/1—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகை விற்பனை

### மன்னார் மாவட்டம்—1970/71

மேற்குறிப்பிட்ட தவறணையில் பிறதேசக் குடிவகை, 1970 ம் ஆண்டு ஒக்டோபர் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதி வரைக்கும் விற்கும் சிறப்புரிமை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இச்சிறப்புரிமை கீழ்ச் சொல்லப்பட்ட விதிகளுக்கமைய வழங்கப்படும் :—

(அ) 1970/71 ம் குத்தகை வருடத்திற்கும் அதற்குப் பின்வரும் காலங்களுக்குரிய பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகை விதிகள், இவ்விதிகளை 15.5.70 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

(ஆ) தற்போது நடைமுறையிலிருக்கும் எல்லாக் கலால் உத்தரவுப் பத்திரங்களுக்கும் பொருந்தக்கூடிய நிபந்தனைகள்.

2. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் குறிக்கப்பட்ட பத்திரத்திலும் வைப்புப் பணம் ரூபா 750 க்கான கச்சேரி பற்றுச்சீட்டுடனும் இருத்தல் வேண்டும்.

3. எந்தப் பகுதியில் காணி இருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் இணைக்கப்படவேண்டும்.

4. பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25 சதவீதத்துக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

5. கேள்விக்காரர்கள் தாம் சொந்தப் பெயரில் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். பிரதிநிதி மூலமாகவோ அன்றேல் இலங்கையரல்லாத ஒருவர் மூலமாகவோ அல்லது மேற்சொல்லப்பட்ட விற்பனை விதிகள் 6 ம் இலக்கத்தின் கீழ் தகுதியற்றவர்களெனச் சொல்லப்பட்டிருக்கும் எவர் மூலமோ அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றும் கவரிலிட்டு, கவரின் இடது மேற்புறத்தில் " பிறதேசக் குடிவகைத் தவறணை, மன்னார்—1970/71" என எழுதப்பட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு 2.7.70 முற்பகல் 10.30 மணிக்குப் பிந்தாமல் வந்துசேர வேண்டும். கேள்விப்பத்திரம் பெறும் காலம் 2.7.70 முற்பகல் 10.30 மணிக்கு முடிவடையும். கேள்விக்காரர்கள் அனைவரும் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கச்சேரியில் இருத்தல் வேண்டும்.

7. சித்திபெற்ற கேள்விக்காரர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டதும், விற்பனை விதி கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் நிர்ணயிக்கப்படும் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டவும் வேண்டும்.

8. சித்திபெற்ற கேள்விக்காரர், விற்பனை விதிகளில் கைச்சாத்திடவும் பிணைப்பணம் கட்டவும் தவறினால் அவரால் கட்டப்பட்ட வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதோடு கலால் உத்தரவுப்பத்திரம் ஏதேனும் பெறுவதற்குத் தகுதியற்றவராக அவரது பெயர் குற்றப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படும். மேற்சொல்லப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைய, கேள்விக்காரர்களது வைப்புப்பணம் விற்பனை விதிகளில் சித்திபெற்றவர் கைச்சாத்திட்டு பிணைப்பணம் கட்டியபின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. ஏதாவதொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ நிராகரிக்க மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

10. அங்கீகாரம் பெற்ற பிறதேசக் குடிவகைத் தவறணையின் விபரங்கள் பின்வருமாறு:—

| தொடர் இல. | பகுதி | தவறணை இருக்க வேண்டிய இடம் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | .. மன்னார் பட்டினம் .. | .. மன்னார் பட்டினசபை எல்லைக்குள் | .. காலை 8.00 மணி.. | இரவு 7.30 மணி |

11. தற்போது தவறணை இருக்கும் இடத்தில் தவறணையை அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அமைக்க வேண்டும்.

12. இதையிட்டு மேலும் விபரங்கள் அறியவேண்டுமாயின் அரசாங்க அதிபருக்கு மனுப் பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

மன்னார் கச்சேரி,
5.7.70.

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்

7–590/2—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## *நொத்தாரிஸ்மார் சட்டம்*

*107 ஆம் அத்தியாயம் 7 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்*

கரவெட்டி கிழக்கு கந்தப்பர் மயில்வாகனம் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசு ஆகக் கடமை பார்க்க என்னை நியமிக்கும்படி இத்திகதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்ய இருக்கிறேன் என்பதனை இதனால் அறியத் தருகிறேன்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
29.6.70.

க. மயில்வாகனம்

7-421—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## *பிரசித்த நொத்தாரிசுவாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பம்*

அம்பாறை டிஸ்திறிக் கரைவாகுப்பற்று காரைதீவு 3 ஆம் குறிச்சி நாகமணிப்பிள்ளை இராசையா ஆகிய நான் மட்டக்களப்பு நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தொழில் செய்ய என்னை அனுமதித்துப் பதிவு செய்யும்படி பதிவு காரியஸ்த தலைவர் அவர்கட்கு ஒரு மாதத்தின் பின் விண்ணப்பம் செய்யும் கருத்துடையவனாக இருக்கிறேன் என்பதை நொத்தாரிஸ்மார் சட்டம் (அத்தியாயம் 91) 1 ஆம் அட்டவணை B பகுதி 2 ஆம் ஒழுக்கவிதியின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

இப்படிக்கு
நா. இராசையா

7-505—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகள் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் .. | 5. 6.70 | வெள்ளி .. | 29. 5.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 11. 6.70 | வியாழன் .. | 5. 6.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் .. | 11. 6.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் .. | 18. 6.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| யூலை .. | 2. 7.70 | வியாழன் .. | 25. 6.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி .. | 2. 7.70 | வியாழன் .. | ந.ப. | 12 00 |
| | 17. 7.70 | வெள்ளி .. | 10. 7.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி .. | 17. 7.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி .. | 24. 7.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| ஓகத்து .. | 7. 8.70 | வெள்ளி .. | 30. 7.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி .. | 7. 8.70 | வெள்ளி .. | பி. ı. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி .. | 14. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி .. | 21. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் .. | 4. 9.70 | வெள்ளி .. | 28 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி .. | 4. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி .. | 11. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி .. | 18. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ட. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந. ı. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3 30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.